பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 20, செவ்வாய்க்கிழமை 04.07.2017 கதிர் 240

## டெங்குக் காய்ச்சலால் இரு மாணவர்கள் மரணம்!

பதுளை, ஜூலை 04

டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு பதுளை பிரதான வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த இரு மாணவர்கள் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தனர்.

பதுளை மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் இசுரங்க

பக்கம் 18

### 27 வருடங்களின் பின்னர்

# மயிலிட்டி துறைமுகம் விடுவிப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 04

**யாழ். வலிகாமம் வடக்கு இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்திற்குள்ளிருக்கும் மயிலிட்டித் துறைமுகமும் மற்றும் அதனைச் சூழ்ந்திருக்கும் 54 ஏக்கர் நிலப்பரப்பும் நேற்று மீள்குடியேற்றத்திற்காக இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டன.**

1990 ஜூன் மாதம் 'ஈழம் யுத்தம் - 2' கோரமாக வெடித்தமையை அடுத்து மயிலிட்டி மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர்.

யுத்தம் காரணமாக வலி.வடக்கில் இருந்து பல்லாயிரக்கணக்கில் மக்கள் வெளியேற அப்பிரதேசங்கள் இராணுவ வசமாகின.

பக்கம் 18








## மீனவர்களின் 30 படகுகள் மயிலிட்டித் துறைக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 04

யுத்த இடப்பெயர்வை அடுத்து பருத்தித்துறைப் பகுதியில் தொழில் செய்த மீனவர்களின் முப்பது படகுகள் நேற்று விடுவிக்கப்பட்ட மயிலிட்டித் துறைமுகத்திலிருந்து தொழில் செய்வதற்காக அங்கு புறப்பட்டுச் சென்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

பக்கம் 18

### ★ஜனாதிபதி ஆட்சிமுறையையும் மாற்றக்கூடாது

# புதிய அரசமைப்பு தேவையேயற்றது!

### அஸ்கிரிய பீடம் திட்டவட்டம்



கொழும்பு, ஜூலை 04

**"இலங்கைக்கு இன்றைய சூழலில் புதிய அரசமைப்புத் தேவையற்றது."**

**- அஸ்கிரிய பீடத்தின் கரக சங்க சபா இவ்வாறு தீர்மானம் ஒன்றை நேற்று நிறைவேற்றியிருக்கின்றது.**

அஸ்கிரிய பீடாதிபதி வண. வரகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் தலைமையில் கூடிய சங்க சபா நீண்ட நேரம் இவ்விடயம் குறித்து விவாதித்த பின்னர் இத்தகைய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கின்றது.

இலங்கையின் அரசமைப்பில் பௌத்தத்துக்கு வழங்கப்பட்டுள்ள மேன்மையான இடம், ஒற்றையாட்சி முறைமை மற்றும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஆகியவையும் மாற்றப்

பக்கம் 18

### கிழக்கு, வட மத்தி., சப்பிரமுவ

## 3 மாகாண சபைகளுக்கு ஒக்.2 இல் வேட்பு மனு

கொழும்பு, ஜூலை 04

மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல்களுக்குரிய வேட்பு மனுக்கள் ஒக்டோபர் 2ஆம் திகதி கோரப்படும் என்றும் - அதற்கான வர்த்தமானி

பக்கம் 18

## வியாழன் முதல் டாக்டர்கள் தொடர் பணிப்புறக்கணிப்பு

### மருத்துவ சேவை பாதிக்கும் ஆபத்து

கொழும்பு, ஜூலை 04

மாலபே 'சைட்டம்' தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியிருக்கும் அரச மருத்துவர் சங்கம், அந்த விடயத்துக்கு தீர்க்கமாக முடிவு கட்டும் வரை நாளைமறுதினம் வியாழக்கிழமை முதல் தொடர் வேலை நிறுத்தத்தில் குதிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

பக்கம் 18

## தனியார் இடங்களில் இருந்து படைகளை அரச காணிகளுக்கு மாற்ற நடவடிக்கை

### நேற்றைய கலந்துரையாடலின் பின் சுமந்திரன் நம்பிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

படையினரின் ஆக்கிரமிப்பில் இருக்கின்ற பொதுமக்களது காணிகளை விடுவிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் தனியார் காணிகளில் அமைக்கப்பட்டிருக்கின்ற படை முகாம்களை அரச காணிகளுக்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதால் மக்களது காணிகள் விரைவாக விடுவிக்கப்படுமென எதிர்பார்க்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

படைத்தரப்பின் வசமுள்ள தனியார் காணிகளை விடுவிப்பது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று யாழ். மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் என்.வேத

பக்கம் 18

அளப்பு அருணாசலம்



அப்ப.... கல்விமான்களோடை டெங்கு நோயாளிகளையும் உருவாக்கினம் போலை...

## 'சைட்டம்' சர்ச்சையினால்தான் ஜனாதிபதியின் செயலர் ராஜினாமா

கொழும்பு, ஜூலை 04

'சைட்டம்' தனியார் மருத்துவக் கல்லூரிச் சர்ச்சையை ஒட்டி வெடித்த கருத்து முரண்பாட்டாலேயே ஜனாதிபதியின் செயலாளராகப் பணி புரிந்த பி.பி.அபயக்கோன் பதவி விலக வேண்டிய நிலைக்கு உள்ளானாராம்!

அரச மருத்துவர்கள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் நளின் ஹேரத் இந்தத் தகவலை நேற்றுச் செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

பக்கம் 18

## மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் டெங்கு உற்பத்திக்கான 15 மையங்கள்!

கொழும்பு, ஜூலை 04

மொறட்டுவைப் பல்கலைக் கழகத்துக்குள் மட்டும் டெங்கு உற்பத்திக்குரிய பதினைந்து இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு டெங்கு நோய் வேகமாகப் பீடித்து வருகின்றமையை அடுத்து, கல்விச் செயற்

பக்கம் 18

## காணாமற்போனோருக்கு நீதி கோரி ஐ.நா. பொதுச் செயலருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜூலை 4

காணாமற்போனோரின் உறவினர்கள் கிளிநொச்சியில் நடத்தும் போராட்டத்திற்கு உரிய தீர்வைப்பெற்றுத்தரக்கோரி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அந்தோனியோ குட்டேரெஷிடம் மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் இயங்கும் புலம்பெயர் அமைப்பு ஒன்றின் பிரதிநிதிகள் ஐ.நா. பொதுச் செயலாளரை நேரில் சந்தித்து இந்த மனுவைக் கையளித்தனர்.

இலங்கையில் காணாமற்போனோருக்குநீதிகோரி மேற்படி புலம் பெயர்ந்த

பக்கம் 18

## சைட்டத்துக்கு எதிராக அரசுக்குள் போர்க்கொடி

### கிளர்ந்தெழுகின்றார் சம்பிக்க

கொழும்பு, ஜூலை 04

''மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியான - தொழில்நுட்ப, மருத்துவக் கற்கை நெறிக்கான தெற்காசிய நிறுவனத்திற்கு - ('சைட்டத்திற்கு') வழங்கப்பட்டுள்ள மருத்துவப் பட்டதாரிச் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் ரத்துச்செய்யப்படவேண்டும்"

-ஜாதிகஹெலஉறுமய இவ்வாறு கோரியிருக்கின்

பக்கம் 18

# புதிய அரசமைப்பில் சிறுபான்மையினர் கோருவது தங்களின் மதச் சுதந்திர உரிமையையே!

## அமைச்சர் அர்ஜூன தெரிவிப்பு



புதிய அரசமைப்பு திருத்தத்தின் போது பௌத்த மதத்துக்கான முன்னுரிமையை மட்டுப்படுத்துங்கள் என்று தமிழ், முஸ்லிம் மக்கள் என்றுமே கோரவில்லை. மாறாக தங்களது மதச் செயற்பாடுகளை சுதந்திரமாக முன்னெடுப்பதற்கான உரிமைகளை மாத்திரமே கோரினர் என்று பெற்றோலிய வளத்துறை அமைச்சர் அர்ஜூன ரணதுங்க தெரிவித்தார்.

களுத்துறை தொடங்கொடை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் வழிபாடுகளில் ஈடுபடச் சென்றிருந்த போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் மற்றும் இன, மத வேறுபாடுகளைக் களைதல் ஆகியனவே நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாகும். அனைத்து இனங்களும் மதங்களும் ஒன்றிணைந்தால் மாத்திரமே நாம் ஒரு நாடு என்ற வகையில் வளர்ச்சியடைய முடியும்.

எனவே, தற்காலத்தில் நாம் இலங்கையர் என்ற அடையாளத்துடன் ஒன்றுபட்டு பயணிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

தற்போது புதிய அரசமைப்பில் பௌத்த மதத்துக்கான முதன்மை நிலை மாறுபடும் என்று கூறப்படுகின்றது. அவ்வாறான எந்த ஒரு பேச்சுக்களும் தற்போது வரையில் எழவில்லை.

அதேநேரம் அரசமைப்பு மாற்றங்களின் போது பௌத்த மதத்துக்கு வழங்கப்படுகின்ற முன்னுரிமையை மட்டுப்படுத்த வேண்டும் என்று இந்நாட்டு தமிழ், முஸ்லிம் மக்கள் கோரவில்லை. அதனால் பௌத்த மதத்தின் முன்னுரிமையையும் பாதுகாத்துக்கொண்டு மற்றைய மதத்தவர்களின் கடமைகளைச் செய்வதற்கும் இடமளிக்க வேண்டும்.

உலக நாடுகள் அனைத்தும் இவ்வாறுதான் செயற்படுகின்றன. எனவே, சிலர் உண்மைக்கு புறம்பான விடயங்களையே கூறிக்கொண்டிருக்கின்றார்கள். அரசமைப்பு இன்னும் ஒரு சாசனமாக வகுக்கப்படவே இல்லை என்கின்றபோது எந்தவித ஆதாரங்களும் இன்றியே இவர்கள் பேசுகின்றார்கள்.

எவ்வாறாயினும் இவ்வாறு போலியான கருத்துக்களை வெளியிடுகின்றவர்கள் குறுகிய அரசியல் நோக்கத்திலேயே செயற்படுகின்றார்கள். இந்த நிலைப்பாடுகள் தொடர்ந்தால் அழிவை நோக்கியே பயணிக்க வேண்டிய நிலை ஏற்படும்.-என்றார்.

## அரியாலையில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி



யாழ்ப்பாணம், ஜூலை,4

யாழ்ப்பாணம், மாநகர சபை எல்லைக்குட்பட்ட அரியாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (ஏ.ஆர்.வி.) ஏற்றப்பட்டு வருகிறது.

அதன்படி, இன்று செவ்வாய்க்கிழமை-

★காலை 9 மணி முதல் 11 மணி வரை - கண்டி வீதி சரஸ்வதி சனசமூக நிலையத்தில்

★முற்பகல் 11 மணி முதல் ஒரு மணி வரை- ஏ.வி. வீதியில் மிருக வைத்தியநிலையத்தில்.

★பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணி வரை- பிரப்பங்குளம் அம்மன் கோயிலடி இலந்தைக் குளம் வீதி.

**நாளை புதன்கிழமை:**

★காலை 9 மணி முதல் 11 மணி வரை- கலைமகள் சனசமூக நிலையம்.

★முற்பகல் 11 மணி முதல் ஒரு மணி வரை- காந்தி சனசமூக நிலையம், ஆசீர்வாதப்பர் வீதி.

★பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணி வரை- புவனேஸ்வரி அம்மன் கோயில் வீதியில்.

வளர்ப்பு நாய்களுக்கான உரிமைக் கட்டணமாக 30 ரூபா செலுத்தப்பட வேண்டும். (இ)

## வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவில் அநீதி; மன்னாரில் கவனவீர்ப்புப் போராட்டம்



மன்னாரில் வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவில் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட நான்கு குடும்பப் பெண்களே மன்னார் பிரதேச செயலகத்துக்கு முன்பாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இது தொடர்பாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பெண் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்-

'வீட்டுத்திட்டம் தொடர்பில் நாம் நாளாந்தம் மன்னார் பிரதேச செயலகத்துக்குச் சென்றால் அங்குள்ள அதிகாரிகள் எமக்கு உரிய பதில் வழங்குவதில்லை.

ஏற்கனவே, வீட்டுத்திட்டம் கிடைப்பதற்கான புள்ளிகள் வழங்கப்பட்டுப் பயனாளிகள் தெரிவில் எமது பெயர் விவரங்கள் உள்வாங்கப்பட்டு பெயர்ப்பட்டியல் காட்சிப்படுத்தப்பட்ட நிலையில் தற்போதைய பெயர்ப்பட்டியலில் எமது பெயர் நீக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் பண வசதி படைத்தவர்கள், தொழில் ரீதியில் முன்னேறியவர்கள் எனப் பலருக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

## முறையற்ற விதத்தில் சொத்துக் குவிப்பு ரோஹிதவின் வழக்கு ஒத்திவைப்பு!



முறையற்ற விதத்தில் 400 லட்சத்துக்கும் அதிக சொத்து சேர்த்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தனவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை, ஓகஸ்ட் 2 ஆம் மற்றும் 3 ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, இந்த வழக்கின் கணினி ஆதாரங்களை ஆய்வு செய்ய பிரதிவாதியாகக் குறிப்பிடப்படும் தனியார் வங்கிக்கு இடமளிக்கப்படவில்லை என்று அவர்களது சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார்.

விடயங்களை ஆராய்ந்த கொழும்பு மேல் நீதிமன்றம், வழக்கு விசாரணைகளை ஒத்திவைத்துள்ளது. பிரதிவாதிகள் கோரும் விசாரணைகளுக்கு வாய்ப்பளிக்குமாறும் சம்பந்தப்பட்ட தனியார் வங்கிக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

# அம்பாந்தோட்டை துறைமுகம் ஒருபோதும் விற்கப்பட மாட்டாது




உறுதியளித்தார் கப்பற்றுறை அமைச்சர்

அம்பாந்தோட்டை - மாகம்புர துறைமுகம் ஒருபோதும் விற்பனை செய்யப்படமாட்டாது என்று துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் மஹிந்த சமரசிங்க உறுதியளித்துள்ளார்.

அத்துடன், துறைமுகத்தின் பாதுகாப்பை உறுதி செய்து நாடு முகங்கொடுக்கின்ற கடன் சுமையைக் குறைத்து தேசிய தேவைக்கு முன்னுரிமை வழங்கும் புதிய முதலீட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை - மாகம்புர துறைமுகத்தின் ஊழியர்களை நேற்று முன்தினம் சந்தித்த போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

துறைமுக ஊழியர்களின் தொழில் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு சட்ட சிக்கல்களை மனிதாபிமான முறையில் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த இரண்டு ஆண்டுகளிலும் மொத்தமாக 460 கோடி ரூபா நட்டத்தை எதிர்கொண்டுள்ள மாகம்புரத் துறைமுகத் திட்டத்தின் மொத்த கடனை பொது திறைச் சேரியின்றி, துறைமுக அதிகார சபைக்கே திருப்பிச் செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது.

இந்தச்செயற்றிட்டம் மூலமாக மேலும் நாட்டுக்கு ஏற்படும் கடன் சுமையைத் தடுக்கும் பொருட்டு வெளி நாட்டு முதலீட்டாளர்களை அழைப்பதற்கான தேவையேற்பட்டுள்ளது.

அமைச்சரவை அனுமதியுடன் இந்த முதலீட்டுத் திட்டம் தொடர்பாக அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.-என்றார். (ஏ)

## இலங்கை தொடர்பான மகஜர் ஐ.நா. செயலரிடம் கையளிப்பு

இலங்கையில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் ஐ.நா. பிரேரணையை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் உள்ளிட்ட விடயங்கள் அடங்கிய மகஜர் ஒன்று ஐ.நா. செயலாளர் நாயகம் அந்தோனியோ குட் டெரஸிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மற்றும் நாடுகடந்த தமிழீழ அரசு இணைந்து ஐ.நா. தலைமைக் காரியாலயத்துக்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தி, அதன் பின்னர் அந்த மகஜரை கையளித்துள்ளனர்.

# பாழடைந்த வீட்டில் முனகல் கேட்டது பேய் எனப் பயந்து நாங்கள் ஓடினோம்

## வித்தியா படுகொலை வழக்கில் 13 வயதுச் சிறுவன் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஜூலை 04

'பாழடைந்த வீட்டில் இருந்து முனகல் சத்தம் கேட்டது. பேய் எனப் பயந்து நாங்கள் ஓடிவிட்டோம்' – இவ்வாறு, வித்தியா கொலை வழக்கில் சிறுவன் ஒருவன் சாட்சியம் அளித்துள்ளான்.

வித்தியா படுகொலை தொடர்பான சாட்சியப்பதிவு, மேல் நீதிமன்ற நீதிபதிகள் பாலேந்திரன் சசிமகேந்திரன், அன்னலிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் தலைமையில் ட்ரயல் அட் பார் தீர்ப்பாயம் முன்னிலையில் யாழ். மேல் நீதிமன்றத்தில் கடந்த மாதம் 28ஆம்திகதி முதல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இந்த வழக்கிலேயே 13 வயதுச் சிறுவன் ஒருவன் மேற்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளான்.

'சம்பவம் இடம்பெற்ற நாள் நானும் எனது நண்பனும் துவிச்சக்கர வண்டியில் பாடசாலைக்கு சென்று கொண்டிருந்தோம். இதன்போது எனது நண்பனின் பாதணி கழன்று விழுந்து விட்டது. அதை எடுப்பதற்காக பின் நோக்கி ஓடினேன். அப்போது முனகல் சத்தம் கேட்டது.

பாழடைந்த வீட்டில் இருந்து முனகல் சத்தம் கேட்டால் அது பேயின் சத்தம் என நினைத்து நாம் பயந்து ஓடினோம். ஓடும் போது, வித்தியா கொலை வழக்கின் இரண்டாவது சந்தேகநபர் வீதியில் நின்றதைக் கண்டேன்' இவ்வாறு அவர் தனது சாட்சியத்தில் கூறினார்.

அவனோடு சென்ற மற்றைய சிறுவனிடமும் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. அன்றைய தினம் தனது காலணி கழன்று விழுந்ததை உறுதிப்படுத்திய அந்தச்சிறுவன் தனது நண்பனே அதனை எடுக்க பின்னால் ஓடிச்சென்றான் எனவும் கூறினான்.

நேற்றைய சாட்சியப் பதிவில் மூன்றாவதாக சாட்சியமளித்த நபர் ஒருவர், வழக்கின் 2ஆம் எதிரி எனது தங்கையின் கணவன். சம்பவ தினத்தன்று நான் கடைக்குச் சென்றபோது அவரும் 3ஆம் எதிரியும் கடைக்கு அருகே நின்றதை நான் கண்டேன்' என்றார்.

மற்றொரு நபர் சாட்சியமளிக்கையில், 'வித்தியா படுகொலை இடம்பெறுவதற்கு முதல் நாள் நான் கடைக்குச் சென்றபோது சுவிஸ்குமார், சசிகுமார், சந்திரஹாசன், கண்ணன் ஆகியோருடன் மேலும் இருவர் டொல்பின் ரக வாகனமொன்றில் காத்திருந்தனர்.

அப்போது பாடசாலை முடிந்து பேருந்தில் வந்து இறங்கிய வித்தியா கடைக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த தனது துவிச்சக்கரவண்டியை எடுத்துக் கொண்டு சென்றார். அதை வாகனத்தில் இருந்த சுவிஸ்குமார் உள்ளிட்டவர்கள் அவதானித்துக் கொண்டிருந்தனர்' என்றார்.

அவர்கள் அன்று ஏன் அவ்வாறு நின்றார்கள் என்பது சம்பவத்திற்கு பின்னரே தமக்கு தெரியவந்தது எனவும் அவர் கூறினார்.

பெண் சாட்சியாளர் ஒருவர் நேற்று சாட்சியம் அளிக்கையில், சம்பவ தினத்தன்று தான் பிரதேச செயலகத்திற்கு சென்ற போது வழக்கின் சந்தேக நபரான தில்லைநாதன் சந்திரஹாசன் ஒற்றையடிப் பாதை ஊடாக சாரத்தை மடித்து கட்டிக் கொண்டு வேகமாக சென்றார்.

அந்தப் பாதை வழியே சென்றால் வித்தியா கொலை செய்யப்பட்ட இடத்திற்குச் செல்லலாம் என்றார். எனினும் சந்தேக நபர் எங்கு சென்றார் என்பது தனக்கு தெரியாது எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, சந்தேக நபர்களுக்கு எதிராகத்தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பகிர்வு பத்திரத்தில் திருத்தம் செய்வதற்கு வழக்கை நெறிப்படுத்தும் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் கோரிக்கை விடுத்ததையடுத்து, நேற்று மேலதிகமாக இரண்டு சாட்சியாளர்கள் சேர்க்கப்பட்டு மொத்தம் 51 சாட்சியாளர்கள் பெயரிடப்பட்டனர். அத்தோடு, மேலதிகமாக இரண்டு சான்றுப் பொருள்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டன. (ம)

# நவீன உலகுக்கு ஏற்ப சட்டங்கள் வகுக்கப்படும்

## அலரி மாளிகையில் பிரதமர் தெரிவிப்பு

முதலீட்டாளர்களின் வசதிக்காக நவீன உலகிற்கு ஏற்ற வகையில் சட்டங்கள் வகுக்கப்படும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று மாலை நடைபெற்ற, இலங்கையில் முதலீட்டுச் சூழலை விருத்தி செய்வதற்கான திட்டத்தை அறிமுகப்படுத்தும் வைபவத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் கருத்துதெரிவிக்கையில்–

ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் கொள்கை மாற்றங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். 70 ஆம் 80ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு பின்னாலிருந்த பல நாடுகள் இன்று அபிவிருத்தி இலக்குகளை அடைந்திருக்கின்றன.

நாட்டின் முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்தும் விடயத்தில் முதலீட்டாளர்களுக்கு உள்ள தடைகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கையில் முதலீட்டுச் சூழலை விருத்தி செய்வதற்கான திட்டத்தை அறிமுகப்படுத்தும் வைபவத்தில் –

போட்டிமிக்க ஏற்று மதி ஊக்குவிக்கப்படும். உற்பத்திக் கைத்தொழிலுக்காக உலகின் நவீன தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்த சந்தர்ப்பம் அளிப்பது இதன் மற்றுமொரு நோக்கமாகும். – என்றார். (ம)

# துயர் பகிர்கின்றோம்

**வேலணை வடக்கு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட**

## பாலசுப்பிரமணியம் மதியழகன்

**(இலந்தைவனப்பதி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தா)**



துளி கூட நம்பத் தகாத சாவு
நினைத்தும் பார்க்க முடியாத துயரு.
வழி நெடுக வந்த உறவு – பாதி
வழியினில் பிரிந்த அவலம்.
மதி... இது என்ன விதி.
கதியென்று நீ துதித்த இலந்தை வனம்
கதியிழந்து தவிக்கின்றதே.
வாழ வைத்த ஊர்விட்டுச்
சாவதற்கா போனாய் பயணம்.
மீள முடியவில்லை உன்
நினைவிலிருந்து எம்மால்...
நீ வாழுவாய் நேற்றுப் போல் நாளையும்!

*உன் ஆத்மா சாந்தியடைய*
*வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்*

**புதிய நதியா நகை மாடம்,**
***இல. 73, கஸ்தூரியார் வீதி,***
***யாழ்ப்பாணம்.***

# தடகளப் போட்டி ஆரம்ப நாள் விழா நாளை மறுதினம்

யாழ்ப்பாணம், ஜூலை 04

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பாடசாலைகள் மட்டத்திலான தடகளப் போட்டியின் ஆரம்பநாள் விழா, நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு, யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும்.

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுக்குப் பிரதமவிருந்தினராகக் கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சர் சி.தண்டாயுதபாணி கலந்து கொள்வார்.

இறுதி நாள் விழா எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு, துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும்.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் நிகழ்வுக்குத் தலைமை வகிப்பார். பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபைப் பிரதம செயலாளர் அ.பத்திநாதனும் கலந்து சிறப்பிப்பர். (இ)

# செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. அனுராதபுரம் நீதிமன்றில் ஆஜர்

## பிணையில் விடுவித்தார் நீதிபதி

அனுராதபுரம் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகினார். நீதிமன்று அவரைப் பிணையில் விடுவித்தது.

கடந்த 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை வவுனியாவில் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) தொலைக்காட்சி ஒளிபரப்பை நடத்தியது.

வன்னியில் இறுதிக்கட்ட யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது அங்கு தமிழ் மக்களுக்கு எதிராக படையினரால் இழைக்கப்பட்ட கொடுமைகள் ஒளிபரப்பப்பட்டன. இதனால் ஒளிபரப்பு நிலையம் சுற்றிவளைக்கப்பட்டு அங்கிருந்தவர்கள் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டனர்.

இந்த விடயம் தொடர்பில் ரெலோ இயக்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் மீதும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இந்தவழக்குவிசாரணைகள் வவுனியா நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்தது. பின்னர் அது அநுராதபுரம் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு அங்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த மாதம் அனுராதபுரம் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு விசாரணைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் திடீர் சுகவீனம் காரணமாக மன்றில் ஆஜராகவில்லை. அதனால் செல்வம் அடைக்கலநாதனுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இதனையடுத்து நேற்று நடைபெற்ற வழக்கு விசாரணையின்போது மன்றில் ஆஜராகிய செல்வம் அடைக்கலநாதனை நீதிபதி பிணையில் விடுவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் மற்றும் மாகாண சபை உறுப்பினர் கருணாகரன் (ஜனா) ஆகியோர் பிணைக் கையெழுத்திட்டு அவரை அழைத்துச்சென்றனர். (ம)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மீனவர்களுக்குத் தீர்வு அவசியம்

இலங்கையில் மீனவர்களின் பிரச்சினை பல மட்டங்களிலும் பல விதங்களிலும் பூதாகரமாகி வருகின்றது. அதிலும், வடக்கு - கிழக்குப் பிரதேசங்களை - தமிழர் தாயகத்தை - சேர்ந்த மீனவர்களின் சிக்கல்களே மிக நெருக்கடியானவையாக மாறி வருகின்றன.

இரண்டு தசாப்த கால யுத்தத்தினால் தங்களின் வாழ்வாதாரங்களை இழந்து, கடலுக்குள்ளேயே இறங்க முடியாமல், சொந்த இடங்களை விட்டு வெளியேறி, பேரவலப்பட்ட பிரதான சமூகம் என்றால் அது நமது மீனவர்கள்தான்.

பரம்பரை பரம்பரையாக சொத்தைக் கொட்டிக் கொடுத்த சமுத்திர அன்னையின் மடியில் தவழ முடியாமல் துவண்டு நின்ற நமது மீனவர்கள், யுத்தம் முடிந்தது, போர் நின்றது, இனி சந்தோசமாக வாழலாம் என்றால் அதிலும் மண்தான் விழுந்துள்ளது.

கடற்றொழிலிலும் அந்நியர் ஆக்கிரமிப்பு எல்லை மீறுகின்றது.

ஒருபுறம் தென்னிந்திய - தமிழக - மீனவர்கள் என்றால் மறுபுறம் தென்னிலங்கை மீனவர்களின் ஆக்கிரமிப்பு; அத்துமீறல்.

பாரம்பரியமாகத் தாம் தொழில் செய்த வலைப்பாடுகளில் தொழில் செய்ய முடியாத அடாவடித்தனம்.

நீதிமன்றங்களுக்குப் போனால் விடயம், விவகாரமாகக் காலத்தை இழுத்தடித்து நீள்கிறது. தீர்வு விரைந்து கிட்டுவதில்லை.

தமிழக மீனவர்கள் பல நூற்றுக் கணக்கில் நமது தாயகக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து, நமது கடலோர மீன் வளத்தையே துடைத்தழிக்கும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, நமது செல்வத்தை சுரண்டி, அள்ளிச் செல்கின்றார்கள் அவர்கள்.

இதனால் நமது மீன்வளம் பறிபோவதுடன், அது பெருக முடியாமல் அழிவுறும் ஆபத்தும் நேர்கின்றது.

போதாக்குறைக்கு அலைபோல் கூட்டம் கூட்டமாக வரும் தமிழக மீனவர்களின் படகுகள் நமது மீனவர்களின் வலைகளைப் பதம் பார்த்து அறுத்துக் கொட்டி அழிவு - நாச வேலைகளைச் செய்து விட்டுச் சென்று விடுகின்றன.

மீனவளத்தை வாரி, சுருட்டி, அடியோடு அள்ளும் தமிழக மீனவர்களின் இழுவைப் படகு மூலமான மடிவலைத் தொழிலினால், எமது தாயகக் கடலின் மீன் வளம் அருகி வரும் ஆபத்து நேர்ந்துள்ளது.

இதனால் இத்தகைய மீன் பிடி முறைக்குத் தடை விதிக்கும் சட்டமூலம் ஒன்று வெள்ளிக்கிழமையன்று நாடாளுமன்றுக்கு வருகிறது.

இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இலங்கைக் கடற்பிரதேசத்தில் மீன்வளத்தை அடியோடு சுரண்டி அள்ளும் மடிவலைத் தொழிலில் ஈடுபட்டால் இரண்டு வருடச் சிறையும் ஐம்பதாயிரம் ரூபா வரை அபராதமும் விதிக்கப்படலாம்.

இந்தத் தண்டனை அச்சுறுத்தலுக்கு அஞ்சி இழுவைப் படகு மற்றும் மடிவலைகளுடன் தமிழக மீனவர்கள் நமது தாயகக் கடற்பகுதிக்குள் அத்துமீறும் செயற்பாடு நின்று போகுமா? அல்லது அது தொடர்கதையாக நீடிக்குமா? - என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.


இப்போது தடைசெய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கும் இழுவை மடிவலைத் தொழில் முறைமை, கடந்த ஆட்சிக் காலத்தில் ஊக்குவிக்கப்பட்டதாகக் கூறும் ஒரு பகுதி யாழ். மீனவர்கள் அதனை நம்பி பல லட்சம் ரூபா முதலைத் தாங்கள் இத்தொழிலுக்காகப் போட்டிருக்கையில் திடீரென இத்தொழில் முறைமையை நிறுத்தினால் தங்களின் கதி என்ன என்ற அர்த்தம் நிறைந்த கேள்வியை எழுப்பியுள்ளார்கள்.

கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் இந்த மீனவர்களின் கேள்விக்கு சில பல பதில்களை முன்வைத்திருக்கின்றார்.

"இத்தொழில் முறையைத் தடை செய்வதற்கான சட்டத்தைக் கொண்டு வருவதைப் பற்றிய முன்னறிவித்தல் வந்தபோதே, இத்தொழிலில் இருந்து தம்மை மாற்றுவதற்கு இழுவைமடித் தொழிலாளர்கள் ஆறுமாத கால அவகாசம் கோரியிருந்தனர். ஆனால் இப்போது இரண்டு வருடங்களாகி விட்டன. அத்தோடு இது பரம்பரையான தொழில் முறைமையன்று. இடையில் வந்த ஒரு சிலரால் மிக இலாபகரமான உழைப்புக்காக மீன் வளத்தை அடிக் கடல் மட்டத்தோடு ஒரேயடியாக வழித்து அள்ளும் இந்த முறைமை இடையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முறைமை தொடருமானால் இங்கு மீன்பிடித் தொழிலை நம்பி வாழும் சுமார் இரண்டரை லட்சம் மக்களின் வாழ்வாதாரம் அடியோடு அழியும். அதனை ஏற்க முடியாது." - என்று கூறியிருந்தார் சுமந்திரன்.

ஆனாலும், யாழ். மாவட்டத்தில் இத்தொழிலைச் செய்வோர் ஆழம் குறைந்த, சேற்றுப்புற நீர் நிலைகளில் தமது இந்த முறைமையைத் தொடர்ந்து மேற்கொண்டு மீன்பிடித் தொழிலை முன்னெடுப்பதற்கு ஏற்ற வகையில் புதிய சட்டத்தில் உரிய திருத்தத்தைக் கொண்டு வரத் தாம் முயற்சிப்பார் என சுமந்திரன் யாழ். மீனவர்களிடம் உறுதி கூறியிருக்கின்றார்.

எப்படியாயினும், நமது மீனவர்கள் யுத்தமின்றி, மோதலின்றி, சத்தம் சந்தடியின்றி அத்து மீறல்கள் மற்றும் அடாவடித்தனங்களுக்கு முகம் கொடுக்காமல் தமது தொழிலைச் செய்யக் கூடிய நிலைமையை ஏற்படுத்தினால் இப்போதைக்குப் போதும்.




# உலகின் மிக மோசமான அரசே ஆட்சி செய்கிறது இந்த நாட்டை

## நீண்ட ஆயுள் இல்லை என்கிறார் பிரசன்ன



நாட்டை ஆட்சி செய்யும் அரசு இலங்கையில் மட்டுமல்ல உலகின் மிகவும் மோசமாகத் தோல்வியடைந்த அரசாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

மினுவாங்கொட பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மஹிந்த ஆட்சிக் காலத்தில் நாட்டுக்குக் கிடைக்கப்பெற்ற அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியே அரசு பேசி வருகின்றது.

மக்களிடம் எதனையும் சொல்ல முடியாத அரசு மஹிந்தவின் அபிவிருத்தித் திட்டங்களை அங்குரார்ப்பணம் செய்து அவரையே விமர்சனம் செய்து வருகின்றது.

பிரிவினைவாதிகள் மற்றும் மேற்குலக நாடுகளின் விருப்பு வெறுப்புக்களையே அரசு பூர்த்தி செய்து வருகின்றது.

அரசின் இயலாமையை இன்று வீதியில் இறங்கிப் பார்த்தால் புரிந்து கொள்ள முடியும், ஒரு புறத்தில் டெங்கு மறு புறத்தில் குப்பைகள் நிறைந்து வழிகின்றன.

சில அமைச்சர்கள் நாட்டு மக்களைக் குருடர்களாகவும், செவிடர்களாகவும் நினைத்துப் பேசி வருகின்றனர்.

ஒட்டுமொத்த நாடே அரசை திட்டும் போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு சில அரச விசுவாசிகள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை திட்டித் தீர்க்கின்றார்கள். குப்பையாகியுள்ள அரசுக்கு நீண்ட ஆயுள் கிடையாது.-என்றார். (எ)



## தங்கம்மா ஒரு தவயோகி!

நடை உடை பாவனை யாவற்றிலும்
நல்லறம் மண்ணில் விளைந்திட
நாளை நடப்பவற்றை முன்னரே உரைக்கும்
நல்லதோர் அம்பாள் உபாசகி,
கொடையென அறக்கொடை வகுத்த
குவலய திரிபுர சுந்தரியே அம்மா!
கோவிலாய் வாழ்ந்து கோபுரமாய் உயர்ந்த
கலாநிதி தங்கம்மா ஒரு தவயோகியே!

இன்று (04.07.2017) கலாநிதி தங்கம்மாவின் நினைவு தினம்

- கே.எஸ்.சிவஞானராஜா

## சவுதியில் தங்கியிருக்கும் தொழிலாளர்களுக்கு பொது மன்னிப்பு நீடிப்பு


சவுதி அரேபியாவில் சட்ட விரோதமாக தங்கியிருக்கும் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் அந்த நாட்டை விட்டு வெளியேற வழங்கப்பட்ட பொது மன்னிப்புக் காலம் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தொழிலாளர்களுக்கு கடந்த மார்ச் மாதம் 21 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 25 ஆம் திகதி வரை பொதுமன்னிப்பு காலம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த காலப் பகுதியில் 4 ஆயிரத்து 500 இலங்கையர்கள் நாடு திரும்பினர் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

சவுதியில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் இலங்கையர்கள் அங்குள்ள இலங்கைத் தூதரகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## உயர் குருதியமுக்கத்தை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்



- மன அழுத்தத்தை குறைத்தல்.
- யோகா, தியானம், வழிபாட்டில் ஈடுபடுதல்.
- கோபப்படுதல், உணர்ச்சி வசப்படுதல் என்பவற்றை இயன்றளவு தவிர்த்தல்.
- கோப்பி, தேநீர் அருந்துவதை குறைத்தல்
- மருந்துகளை வைத்திய ஆலோசனைப்படி ஒழுங்காக எடுத்துவரல்.

உயர் குருதிய முக்கம் ஆரம்ப நிலையில் எந்த அறி குறிகளையும் காண்பிக்காது.

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

## நாளை

05.07.2017
புதன்கிழமை

நட்சத்திரம் : விசாகம் கா. 7.55 வரை
திதி : துவாதசி பி.இ 4.37 வரை

சுபநேரம் : 4.27 – 5.57 வரை
இராகுகாலம் : 11.57 – 1.27 வரை

### பயங்கரவாத அச்சுறுத்தல்...:

# விமான நிலையங்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடு தீவிரம்!




கொழும்பு, ஜூலை 04

இலங்கையிலுள்ள விமான நிலையங்கள் அனைத்தும் பாதுகாப்பாக உள்ளன என இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.

விமான ஓடுபாதைகள் உள்ள இடங்களில் கடுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது எனவும் விமானப் படை ஊடகப் பேச்சாளர் கிஹான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கொள்ளுப்பிட்டியிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மீது தாக்குதல் மேற்கொள்வதற்கு ஐ.எஸ். அமைப்பு நடவடிக்கை மேற்கொள்கிறது என வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இரத்மலானை விமான நிலையத்தில்விமானம்ஒன்றை கடத்தி அமெரிக்க தூதரகத்தை தாக்குவதற்காக ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆயுத்தமாகின்றனர்என ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த தகவல் ஊடகங்களில் மாத்திரமே வெளியாகியிருந்தது என விமானப்படை ஊடக பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிக்கை தொடர்பில் இன்னமும் எவ்வித உத்தியோக பூர்வ தகவல்களும் வெளியாக வில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

யுத்த காலம் மற்றும் அதன் பின்னரும் பாதுகாப்புத் தொடர்பில் எவ்வித குறைபாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் விமானப்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐ.எஸ். தீவிரவாதிகள் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் மீது தாக்குதல் நடத்த உள்ளதாக வெளியான தகவல்கள் பற்றி தமக்கு எதுவும் தெரியாது என பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கருணாசேனஹெட்டியாரச்சி தற்போது ஆஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

குடிவரவுகுடியகல்வுதொடர்பில் கன்பராவில் நடைபெற்று வரும் மாநாடு ஒன்றில் கருணாசேன ஹெட்டியாராச்சி பங்கேற்றுள்ளார்.

இந்த நிலையில் கொழும்பு ஊடகமொன்று, ஐ.எஸ் தீவிரவாத தாக்குதல் குறித்து கேள்வி எழுப்பியிருந்தது.

இதற்குப் பதிலளித்த பாதுகாப்புச் செயலாளர் தமக்கு இதுபற்றி எதுவும் தெரியாது என குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் மீது ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளனர் எனவும் இது குறித்து அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவினர் இலங்கை அரசுக்கு அறிவித்துள்ளனர் என்றும் சமூக ஊடக வலையமைப்புக்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

தாம் வெளிநாட்டு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளதாகவும், தெரியாத விடயம் குறித்து எதுவும் பேச முடியாது எனவும் கருணாசேன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாதுகாப்புச் செயலாளர் பதவியில் விரைவில் மாற்றம் செய்யப்பட உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# தேசிய அரசில் இருந்து சு.கவின் 18 எம்பிக்கள் விலகுகின்றனர்?

### நிராகரிக்கிறார் துமிந்த திஸாநாயக்க



கொழும்பு, ஜூலை 04

தேசிய அரசிலிருந்து வெளியேறுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 18 உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர் எனவெளியாகியுள்ளதகவலை அந்த கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் துமிந்த திஸாநாயக்க நிராகரித்துள்ளார்.

தேசிய அரசை அமைப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை அடுத்த மாதத்துடன் நிறைவுக்கு வருகின்றது.

எனவே, அந்த உடன்படிக்கையை இரண்டு வருடங்களுக்கு நீடித்துக்கொள்வது தொடர்பான பேச்சுகளில் இவ்விரு கட்சிகளும் ஈடுபட்டு வருகின்றன. தேசிய அரசு தொடர வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாக இருக்கின்றது.

எனினும், தேசிய அரசில் பங்காளியாகவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர் வெவ்வேறான நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளனர். நிபந்தனைகள் முன்வைக்கப்படவேண்டுமெனவும், தனித்து இயங்கவேண்டும் எனவும் சிலர் கருதுகின்றனர்.

இந்த நிலையில், ஓகஸ்ட் மாதத்துக்குப் பின்னர் அருந்திக பெர்னாண்டோ, டி.பி. ஏக்கநாயக்க உட்பட 18 ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பிக்கள் தேசிய அரசிலிருந்து வெளியேறிச் சுதந்திரமாகச் செயற்படவுள்ளனர்.

இதுபற்றி அவர்கள் விரைவில் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துவார்கள் என செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த விடயம் குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரான அமைச்சர் துமிந்த திஸாநாயக்க கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற வகையில் இதுபற்றி எந்தவோர் உறுப்பினரும் எனக்கு இன்னும் அறிவிக்கவில்லை.

18 உறுப்பினர்களுடன் சுயாதீனமாக இயங்கப் போகின்றோம் என டி.பி.ஏக்க நாயக்க கூறினார் என தெரிவிக்கப்படுகிறது. அவர் இதுபற்றி கட்சிக்கு எதையும் அறிவிக்கவில்லை.

எனவே, இப்படியொரு முடிவை எடுப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானிக்கவில்லை. அப்படியொரு நோக்கமும் இல்லை எனவும் துமிந்த திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# புதிய வரிமுறையை நீக்காவிட்டால் போராட்டம் வெடிக்கும் என எச்சரிக்கை!

கொழும்பு, ஜூலை 04

பாமரன் முதல் பணக்காரன் வரையிலான சகல தரப்பினரையும் பாதிக்கக்கூடிய புதிய வரிமுறைச் சட்டத்தை நீக்காவிட்டால் அடுத்தவாரம் பெரும் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் தாங்கள் ஈடுபடப்போகிறோம் என உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தொழிற்சங்க சம்மேளனம் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் உள்நாட்டு இறைவரி தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் நவீந்த முனவீர தெரிவித்தவை வருமாறு:-

2017 ஆம் ஆண்டு வரவு - செலவுத்திட்டத்தில் பிரேரிக்கப்பட்ட வரிவிதிப்பு தொடர்பான திருத்தங்களை நிதி அமைச்சு இதுவரை செய்யாததால் அரசுக்கு சுமார் 7 ஆயிரம் கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இதன்மூலம் சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களில் ஈடுபட்டிருப்பவர்கள், புத்தக வெளியீட்டாளர்கள், கலைஞர்கள் உட்பட பல்வேறு தரப்பினருக்கும் கிடைக்கவேண்டிய பயன்கள் விரயமாகிப்போயுள்ளன. புதிதாக வரவுள்ள சட்டத்தின் கீழ் இவர்கள் அனைவரும் தொடர்ந்து பாதிக்கப்படுவார்கள்.

நாட்டு மக்களுக்கும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் பெரும் அச்சுறுத்தலாகவுள்ள புதிய வரி விதிப்பு சட்ட மூலத்தை உடனடியாக வாபஸ் பெறாவிட்டால் தங்களது சம்மேளனம் அடுத்தவாரம் நாடளாவிய ரீதியில் பெரும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# லொத்தர் சபைகள் ரவியிடமிருந்து பறிக்கப்படும் அறிகுறி: பந்துல

சமீபத்தில் நடந்த அமைச்சரவை மாற்றத்தின் பின் இதுவரை காலமும் நிதியமைச்சின் கீழ் இயங்கி வந்த தேசிய லொத்தர் சபையும், அபிவிருத்தி லொத்தர் சபையும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பது தொடர்பில் ஏற்பட்டுள்ள சட்ட முரண்பாட்டுக்குத்தீர்வு காண்பதற்காக மஹிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்றைத்தாக்கல் செய்யவுள்ளார்.

1963 ஆம் ஆண்டின் இலக்கம் 11 சரத்தின்படி லொத்தர் சபைகள் நிதியமைச்சின் நிர்வாகத்தின் கீழேயே வரவேண்டும். இந்தச் சபைகளின் நிர்வாகத்துக்கு ஐந்து பேருக்கு மேற்படாத பணிப்பாளர் சபையொன்றை நிதியமைச்சர் நியமிக்க வேண்டும்.

அதில் ஒருவர் சபையின் தலைவராகச் செயற்படுவார். காலம் காலமாக நடந்துவந்த இந்த விதிமுறை இப்போது மாற்றப்பட்டு லொத்தர் சபைகள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பது சட்டத்துக்கு முற்றிலும் முரணானது என அவர் அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

# சிங்களத் தாய்மாரை அதிக பிள்ளைகளை பெற்றெடுக்குமாறு கோரிக்கை!

கொழும்பு, ஜூலை 04

சிங்களத் தாய்மாரே அதிகளவு பிள்ளைகளை பெற்றெடுங்கள் என மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய கோரிக்கை விடுத்துள்ளார்.

நுகேகொடை, அம்புல்தெனியவில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது சிங்களத் தாய்மார் அதிகளவில் பிள்ளைகளை பெற்றெடுத்தால் மட்டுமே நாட்டையும், இனத்தையும் பௌத்த மதத்தையும் காப்பாற்ற முடியும்.

எங்களது சிங்களத் தாய்மார் சிறிய குடும்பம் தங்கம் என்ற எண்ணக்கருவின் பிரகாரம் ஒன்று அல்லது இரண்டு பிள்ளைகளை மட்டுமே பெற்று வளர்க்கின்றார்கள்.

தாங்கள் பிள்ளைகளை பெற்று வளர்க்காது முஸ்லிம்களை திட்டுகின்றார்கள்.

முஸ்லிம் தாய்மார் நான்கு, ஐந்து, ஆறு பிள்ளைகளை பெற்று வளர்க்கின்றார்கள். எங்களது சிங்களத் தாய்மாருக்கும் அதிகளவான பிள்ளைகளை வளர்க்க முடியும். முடிந்தளவு சிங்கள இனத்தை விஸ்தரிக்குமாறு நான் கோருகின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# 83 கலவரம் நடக்காமல் இருந்திருந்தால் இப்போது தமிழில் பேசி இருப்பேன்!

## மட்டக்களப்பில் மஹிந்த தேசப்பிரிய





மட்டக்களப்பு, ஜூலை 04

1983 ஆம் ஆண்டு மட்டக்களப்பு தேர்தல்கள் அலுவலகத்துக்கு ஜூலைக்கலவரம் காரணமாக வரமுடியாமல் போனது. அந்தக்கலவரம் நடக்காமல் இருந்திருந்தால் நான் இப்போது தமிழில் பேசியிருப்பேன்.

-இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்றுத் திங்கட்கிழமை வாக்காளர் தின நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆண், பெண் மற்றும் இன, மத, மொழி, பணக்கார, வறியவர் என்ற பேதமின்றி அனைவருக்கும் பொதுவானதே வாக்குரிமை. 18 வயதான ஒவ்வொருவரும் தமது உரிமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். கட்டாயமாகக் கிடைக்கின்ற மரணத்தை நாம் விரும்புவது இல்லை. ஆனால் வாக்கை விரும்ப வேண்டும். வாக்கின் மூலம் சரியான தலைவர்களை உருவாக்கினால், நாம் வள்ளம் மூலம் ஆஸ்திரேலியா செல்லத் தேவையில்லை.

நல்ல அபிவிருத்தி, சிறப்பான வாழ்க்கை வாழ்வதற்குக்கூட வாக்கு முக்கியம் பெறுகிறது. தேர்தல் நடைபெறவில்லை என்று மக்கள் தேர்தல் ஆணைக்குழு தொடர்பில் விமர்சிக்கின்றனர்.

ஆனால், தேர்தலை நடத்துகின்ற அதிகாரம் மாத்திரமே எம்மிடம் உள்ளது. அதற்கான அனுமதி, அதிகாரங்களை நாடாளுமன்றம்தான் தரவேண்டும்.

உள்ளூராட்சித் தேர்தலைப் பொறுத்த வரையில், உள்ளூராட்சித் திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்ற போதுதான் தேர்தலை நடத்தமுடியும். நடைபெறவுள்ளகட்சித்தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானமும் இதில் முக்கியமானது.

தேர்தலில் தமது வாக்கு மூலம் அரசியல்வாதி ஒருவரைத் தெரிவு செய்வதுடன் எமது கடமை முடிந்தது என்று மக்கள் நினைத்துவிடமுடியாது. தேர்தல்கள் நடத்தப்படவில்லையானால் மக்கள் கேள்வி கேட்க வேண்டும். மக்கள் கிளர்ந்து எழவேண்டும்.- என்றார். (ச)

## கள்ளுத் தவறணைக்கு எதிராக எருவில் மக்கள் கவனவீர்ப்பு!

எருவில், ஜூலை 04

பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீறி எருவில் கிராமத்தில் கள்ளுத் தவறணை அமைப்பதற்கு அனுமதி வழங்கியமையைக் கண்டித்து எருவில் கிராம மக்கள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

களுவாஞ்சிக்குடிப் பிரதேச செயலகத்துக்கு முன்னால் நேற்று திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.



இந்த ஆர்ப்பாட்டத்தில் எருவில் கிராமத்தில் உள்ள பொதுமக்கள்,பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

''எமது கிராமத்துக்குக் கள்ளுத் தவறணை வேண்டாம்'', ''போதையற்ற உலகை உருவாக்குவோம்'', ''சமூக சீர்கேட்டை இல்லாது ஒழிப்போம் '', ''வேண்டாம் மது'' எனும் சுலோகங்களைக் கொண்ட பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

இதன்போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் பி.எஸ்,எம் சாள்ஸ் ஆகியோருக்கான மகஜர்களை களுவாஞ்சிக்குடிப் பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதனிடம் ஆர்ப்பாட்டக்காரர்கள் கையளித்தனர். (ச)

## வாகரை மாவீரர் இல்லத்தில் நேற்று சிரமதானப் பணிகள்!







மட்டக்களப்பு,ஜூலை 04

வாகரை கண்டலடி மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தில் சிரமதானப் பணிகள் நேற்றுத் திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டன.

கண்டலடி, புளியங்கண்டலடி, வாகரை, பால்சேனை, கதிரவெளி போன்ற கிராம அபிவிருத்திச் சங்கங்கள் இணைந்து இந்தச் சிரமதானப் பணிகளை முன்னெடுத்தன.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன், கிழக்கு மாகாண பிரதி அவைத்தலைவர் இந்திரகுமார் பிரசன்னா மற்றும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான எஸ். நடராஜா, ஞா.கிருஷ்ணபிள்ளை, பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கண்டலடி மாவீரர் து2யிலும் இல்லத்தில் அமைக்கப்பட்டிருந்த கல்லறைகள் அனைத்தும் யுத்தம் முடிவடைந்த பின்னர் பாதுகாப்புப் படையினரால் அழிக்கப்பட்டு, தென்னை மரங்கள் நடப்பட்டன. எனினும், உரிய பராமரிப்பின்றி காணப்பட்டமையால் அப்பகுதி தற்போது பற்றைக் காடாக மாறியுள்ளது.

இந்த நிலையில், வாகரை, கோரளைப்பற்று வடக்கு பிரதேச சபைக்குரிய ஜே.சி.பி. கனரக வாகனம் மற்றும் உழவு இயந்திரங்களை கொண்டு ஆண்கள் பெண்கள் என அனைவரும் இணைந்து இந்த இடத்தைச் சுத்தப்படுத்தினர்.

இதன்போது, சிதறிக் கிடந்த சுமார் 50 இற்கும் மேற்பட்ட கல்லறைகள் கண்டெடுக்கப்பட்டு, உரிய இடத்தில் நிரையாக நடப்பட்டன.

இந்தப் பகுதியில் யுத்தத்தின்போது உயிரிழந்த விடுதலைப் புலிகளின் உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டு வந்தன. இந்த இடத்தை மாவீரர் துயிலும்இல்லமாகவிடுதலைப்புலிகள் பராமரித்து வந்தனர். யுத்தம் முடிவடைந்த பின்னர் மேற்படி மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்ட கல்லறைகள் அனைத்தும் படையினரால் சேதமாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கிழக்கில் தமிழ் முதல்வரை உருவாக்க எந்தத் தியாகத்தையும் செய்யத் தயார்!

### கருணா தெரிவிப்பு

கிழக்கு மாகாணத்தில் தமிழ் முதலமைச்சர் ஒருவரை உருவாக்குவதற்கு எந்தவொரு தியாகத்தைச் செய்வதற்கும் தயார்.

-இவ்வாறு கருணா என அழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபையின் ஆயுள்காலம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருகின்றது. அதன்பின்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு உத்தேசித்துள்ளது. இதற்கான அறிவிப்பு ஒக்ரோபர் முதல் வாரத்தில் விடுக்கப்பட்டஉள்ளது. இந்த நிலையில், ஆட்சி மாற்றத்தின் பின்னர் இலங்கைச் சுதந்திரக்கட்சியிலிருந்து வெளியேறி புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்துள்ள கருணா, கிழக்கு மாகாண சபைத் தேர்தலை இலக்கு வைத்து காய்நகர்த்தல்களை முன்னெடுத்து வருகின்றார். இந்த நிலையில், தேர்தல் ஏற்பாடுகள் பற்றி ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் எமது கட்சி நிச்சயம் களமிறங்கும். எனினும், அதற்கப்பால் தமிழ் முதலமைச்சர் என்ற எண்ணம் கிழக்கிலும் நிறைவேற வேண்டும். சகல தமிழ்க் கட்சிகளும் இணைந்து போட்டியிட்டால் இது நிச்சயம் சாத்தியமாகும்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அண்ணன் ஆகியோரை விரைவில் சந்திக்க உத்தேசித்துள்ளோம். அதன் பின்னர் ஏனைய தரப்புக்களுடனும் பேச்சு நடத்தப்படும். -என்றார்.

# வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் தனிநாட்டை அமைப்பதற்குத் திட்டம்!

## நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டுகிறார்



தனிநாட்டுக்கான அடித் தளத்தை இடுவதற்காகவே வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் பொலிஸ், காணி அதிகாரங்களைக் கோருகின்றன என்றும், அரசமைப்பில் அதற்குரிய ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன எனவும் நாடாளு மன்ற உறுப்பினர் விமல்வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கண்டி தபாலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற 'சல்லாபிக்கும் அரசும் துஷ்பிரயோகிக்கப்படும் இலங்கை மாதாவும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போரை முடித்த கையோடு மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு அபிவிருத்தி பக்கம் விசேட கவனம் செலுத்தியது.

அபிவிருத்திச் செயற்பாடுகள் அசுரவேகத்தில் இடம் பெற்றன. இதனால் பல்துறைகளிலும் நாடு வளர்ச்சி கண்டது.

ஆனால், ஆட்சி மாற்றத்தின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றம்தான் என்ன? தேசிய பாதுகாப்பு, பொருளாதாரம், சுகாதாரம் என முக்கிய துறைகள் யாவும் அச்சுறுத்தலையும், சவால்களையும் எதிர்கொண்டுள்ளன.

இந்தியா, நோர்வே மற்றும் தமிழ்ப் பிரிவினைவாதிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் நோக்கிலேயே புதிய அரசமைப்பு தயாரிக்கப்பட்டு வருகின்றது.

தற்போதுள்ள அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. புதிய அரசமைப்பின் ஊடாக பௌத்த மதத்துக்குப் பின்னடைவு ஏற்படும் அபாயம் இருக்கின்றது.

குறிப்பாக, 1815ஆம் ஆண்டு கலகத்தில்கூட பௌத்த மதம் இந்தளவு கொச்சைப்படுத்தப்படவில்லை.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மட்டுமே பகிர வேண்டியுள்ளது.

இவ்விரு அதிகாரங்களையும் வடக்கு, கிழக்கு மாகாணங்களே கோருகின்றன. தனிநாடு ஒன்றை உருவாக்கும் நோக்கிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. சாசனத்தின்படி தனிநாடொன்று உதயமாக வேண்டுமானால் அடிப்படையாக இரண்டு காரணிகள் தேவை.

ஒன்று, ஆட்புல எல்லை ஒன்று இருக்கவேண்டும். இரண்டாவது, அங்கே மனித உரிமை மீறல்கள், ஆட்கடத்தல், காணாமற்போதல் போன்ற நிகழ்வுகள் நடந்திருக்க வேண்டும்.

அப்படியானால்தான் தனிநாடொன்றை ஏற்படுத்த முடியும். இவை இரண்டையும் மேற்கொள்ள முதலில் ஆட்புல எல்லைக்காக காணி அதிகாரம் வழங்கப்படவுள்ளது.

அடுத்ததாக இராணுவச் சிப்பாய்களை குற்றவாளிகளாக்கி மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும், மனித கடத்தல் மற்றும் காணாமற்போதல் நிகழ்வுகள் இடம் பெற்றன எனவும் காட்ட முயற்சிக்கின்றனர்.

அதனூடாக ஏதாவது ஒரு நாடு முன்வந்து ஐ.நா. சபையில் தீர்மானம் நிறைவேற்றி தனிநாட்டைப் பெற்றுக் கொடுக்கும் தந்திரமொன்று அரங்கேற்றப்பட்டு வருகின்றது. இது வடக்கு, கிழக்கு மக்களைத் திருப்திப்படுத்தும் ஒரு விடயமாகும்.

அத்துடன், காணாமற்போனவர்கள் பற்றி ஆராய விசாரணைக்குழு அமைக்கப்படவுள்ளது. அப்படி அமைக்கப் பட்டால் நாட்டுக்காக தியாகம் செய்த பல்வேறு பாதுகாப்புப் படையினரைப் பொய்க் குற்றச்சாட்டில் கைதுசெய்யலாம்.

எமது தாய்நாட்டைக் காப்பாற்றியயுத்தசிப்பாய்களுக்கும் புலன் ஆய்வுகளை மேற்கொண்ட இராணுவப் புலனாய்வுத்துறைக்கும் செய்யும் கைம்மாறு இதுவா? எனக் கேட்க விரும்புகின்றேன்.

## இலங்கைக்கான முன்னாள் தூதுவர் நிருபம் சென் காலமானார்!



கொழும்பு, ஜூலை 04

இந்தியாவின் மூத்த இராஜதந்திரிகளில் ஒருவரும், இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவருமான நிருபம் சென் புதுடில்லியில் நேற்றுமுன்தினம் காலமானார்.

பல்கேரியா, நோர்வே ஆகியநாடுகளில் இந்தியாவின் தூதுவராகப் பணியாற்றிய நிருபம் சென், கடந்த 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரையான காலத்தில் இலங்கைக்கான இந்திய தூதுவராகப் பணியாற்றியிருந்தார்.

அதையடுத்து, கடந்த 2004ஆம் ஆண்டு தொடக்கம், 2009 ஆம் ஆண்டு வரை ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாக அவர் பணியாற்றினார்.

ஓய்வு பெற்ற பின்னர், ஐ.நா. பொதுச்சபைத் தலைவரின் சிறப்பு மூத்த ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

இலங்கையில் நிருபம் சென் தூதுவராகப் பணியாற்றிய காலகட்டத்திலேயே, விடுதலைப் புலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்க அரசுக்கும் இடையில் போர் நிறுத்தம் செய்து கொள்ளப்பட்டு, அமைதிப் பேச்சுக்கள் முன் னெடுக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது .

மரணமாகும் போது, நிருபம் சென்னுக்கு வயது 70 ஆகும்.

(க)

## கிழக்கு ஆளுநராக லியனகே நியமனம்? கட்டாரிலிருந்து திருப்பி அழைக்கப்பட்டார்!



கொழும்பு, ஜூலை 04

கிழக்கு மாகாண ஆளுநராக வர்த்தகரும், கட்டாருக்கான தூதுவராகப் பணியாற்றுபவருமான ஏ.எஸ்.பி.லியனகே நியமிக்கப்படவுள்ளார் என்று கொழும்பு ஆங்கில நாளிதழ்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ ஜனாதிபதியின் செயலராகப் பதவியேற்கவுள்ள நிலையில் கிழக்கு மாகாண ஆளுநர் பதவிக்கு ஏ.எஸ்.பி லியனகே நியமிக்கப்படவுள்ளார் என்று கூறப்படுகிறது.

கட்டாரில் தூதுவராகப் பணியாற்றும் ஏ.எஸ்.பி லியனகே நேற்றுமுன்தினம் கொழும்புக்குத் திருப்பி அழைக்கப்பட்டுள்ளார். அவர் நேற்று முன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

முன்னதாக, மாகாண ஆளுநராகவே தன்னை ஜனாதிபதி நியமிக்கவிருந்தார் என்றும், எனினும், அதற்கான வெற்றிடம் இல்லாததாலேயே கட்டாருக்கான தூதுவராக நியமித்தார்என்றும் ஏ.எஸ்.பி. லியனகே கூறியிருந்தார்.

கடந்த மார்ச் மாதம் அவர், கட்டாருக்கான தூதுவராகப் பதவியேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, தேசிய காங்கிரஸ் கட்சியின் அதாவுல்லாவை கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்க ஜனாதிபதி மைத்திரி திட்டமிட்டுள்ளார் என நேற்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(க)

## நாடாளுமன்ற உறுப்பினர்களின் வருடாந்த கொடுப்பனவுகளுக்கு ரூ. 25 கோடி செலவு!

கொழும்பு, ஜூலை 04

நாடாளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவுகளுக்காக ஆண்டு ஒன்றுக்கு சுமார் 25 கோடி ரூபா செலவிடப்படுகின்றது.

இந்த விடயம் நாடாளுமன்ற தகவல்களின் மூலம் தெரியவந்துள்ளது. கடந்த 2016 ஆம் ஆண்டில் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவுகளுக்காக 25கோடி 85 லட்சத்து 82 ஆயிரத்து 312 ரூபா செலவிடப்பட் டுள்ளது. பொதுவாக ஒரு மாதத்தில் எட்டு நாள்கள் நாடாளுமன்ற அமர்வுகள் நடத்தப்படுகின்றன. இதன் போது ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்காக 12 ஆயிரத்து 8 ரூபா செலவிடப்படுகிறது.

இதன்படி, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் கொடுப்பனவுகளுக்காக மாதம் ஒன்றுக்கு 97 ஆயிரத்து 65 ரூபா வழங்கப்படுகிறது.

## புதிய வைரஸ் தடுப்பூசி இலங்கையில் அறிமுகம்!

கொழும்பு, ஜூலை 04

சுகாதார அமைச்சில் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவு ஹியுமன் பப்பிலோமா என்ற வைரஸ் தடுப்பூசியை நேற்று இலங்கையில் உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தியுள்ளது.

இலங்கையில் நுண்காம்புக்கட்டி புற்றுநோயைத் தடுப்பதற்காக இந்தத் தடுப்பூசியைப் பயன்படுத்தும் வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்துவதாக சுகாதார போஷாக்கு மற்றும் சுதேசிய வைத்தியத்துறை அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். (க)

# வவுனியாவில் வறிய குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஆடுகள்



வவுனியாவில்வறியகுடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் புனர்வாழ்வு பெற்று வந்தவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஒரு தொகுதி ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசா, தனது குறித்தொதுக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து இந்த உதவியை வழங்கினார். (எ)

# சாவகச்சேரி நகர் புளியடி சந்தியில் பாதுகாப்பான ரயில் கடவை தேவை

## அங்கஜன் இராமநாதனிடம் கோரிக்கை



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அருகில் உள்ள புளியடிச் சந்தியில் பாதுகாப்பான ரயில் கடவை அமைத்து தருமாறு பொதுமக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராம நாதனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் அந்த பாதுகாப்பற்ற ரயில் கடவையில் இராணுவ வாகனம் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து பாதுகாப்பற்ற ரயில் கடவை ரயில் நிலைய ஊழியர்களால் பொது மக்கள் பயணிக்க முடியாதவாறு மூடி அடைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் கவனத்துக்கு கொண்டு சென்றதைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் பிரத்தியேகச் செயலாளரும், தந்தையாருமாகிய சதாசிவம் இராமநாதன் நேரடியாகச் சென்று பாதுகாப்பற்ற ரயில் கடவையைப் பார்வையிட்டார். அத்துடன், மக்களின் கருத்தையும் கேட்டறிந்து கொண்டார். இதன் போது பிரதேச மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்;

இந்த வீதி 1965 ஆண்டில் இருந்து பாவனையில் இருக்கின்றது. திட்ட வீதி வரைபடத்தில் இந்த வீதி உள்ளடங்குகின்றது. பாடசாலை, வைத்தியசாலை, வர்த்தக நிலையங்களுக்கென தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்-என்றனர்.

இதற்குப் பதிலளித்த சதாசிவம் இராமநாதன், இது தொடர்பாக போக்குவரத்து அமைச்சருடன் ஏற்கனவே கலந்துரையாடி உள்ளோம். பிரதேச மக்கள் சிலரை கொழும்புக்கு அழைத்துச் சென்று போக்குவரத்து அமைச்சுடன் அவர்களின் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

அதன் பின்னர் சாவகச்சேரி பழனியாண்டவர் ஆலயத்தில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் மக்கள் குறைகள் கேட்டறியப்பட்டு வாழ்வாதார உதவிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். (எ-21)

# தினசரி ராசி பலன் 04.07.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆனித் திங்கள் 20 ஆம் நாள் ஏகாதசித்திதி இரவு 12.29 மணி வரை. பின்னர் துவாதசி. நட்சத்திரம் விசாகம் பி.இ. 5.26 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம் மாலை 3.24 மணி முதல் 4.59 மணி வரை. சுபநேரம். பகல் 10.29 மணி முதல் 11.59 மணி வரை. இன்று ஏகாதசி விரதம். தங்கம்மா அப்பாக்குட்டி குருபூசைத்தினம். திவசம் செய்ய வேண்டிய திதி. ஆனி மாத வளர்பிறை ஏகாதசி. பிறந்த நட்சத்திர வழிபாடு: விசாகம்.**

## ‘ஜோதிடமணி’ பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. ஏற்ற இறக்க நிலை உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு எடுத்த காரியங்களில் தடங்கல் ஏற்படும். தொழிலாளர்கள் பாடுபட்டதன்பலன் குறையும்.

**ரிஷபம்:** யோகமான நாள். குடும்பத்தில் நற்காரிய கொண்டாட்டங்கள் மனமகிழ்வைத் தரும். அசையாச் சொத்துகளை வாங்கும் யோகம் உண்டாகும். சிலருக்கு வெளிநாடு சென்று தொழில் புரியும் வாய்ப்புகள் கிட்டும்.

**மிதுனம்:** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. தொழில், அந்தஸ்து வளர்ச்சியடையும். சிலருக்குப் புதிய தொழில்வாய்ப்புகள் கிடைக்கும்.

**கடகம்:** கவலையான நாள். தொழிலில் கடின உழைப்பும், அலைச்சலும் அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்களால் தொல்லைகள் உண்டாகும். வியாபாரத்தில் பொருள்கள் தேங்கிக்கிடக்கும்.

**சிம்மம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பயணங்களால் செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் சமலாபம் கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.

**கன்னி:** மகிழ்ச்சியான நாள். தனவரவு அதிகரிக்கும். உறவினர் வீட்டுச்சுப நிகழ்ச்சிகளில் கலந்து மகிழ்வார்கள். வியாபாரம் நன்கு செழிப்படையும். தொழிலில் உயர்வுகள் கிடைக்கும்.

**துலாம்:** சுபீட்சமான நாள். பணம் பலவழிகளாலும் வந்துசேரும். குடும்பத்தில் சந்தோஷம் மிகுந்து சுபீட்சம் உண்டாகும். செல்வாக்கும், வெளியாள்களின் உதவிகளும் கிடைக்கும். நற்காரியங்கள் கைகூடும் வாய்ப்புண்டாகும்.

**விருச்சிகம்:** சலனம் மிகுந்த நாள். தனவரவு குறையும். மனதில் குழப்பம், யோசனை, கவலை அதிகரிக்கும். குடும்பத்தில் பிரச்சினைகள் அதிகரிக்கும். நண்பர்கள் உறவினர்களின் உதவி, ஒத்தாசைகள் குறையும்.

**தனுசு:** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. வியாபாரம் போதிய லாபத்தைத் தரும். உத்தியோகத்தர்களின் திறமையால் மேலதிகாரிகளின் பாராட்டும், பதவி உயர்வுகளும் கிடைக்கும்.

**மகரம்:** விருத்தியான நாள். தனவிருத்தி உண்டாகும். குடும்ப உறவில் அன்பு, பண்பும் கலந்திருக்கும். உத்தியோகத்தர்களுக்கு முன்னேற்றம் உண்டாகும். சுயதொழில் விருத்தியடையும்.

**கும்பம்:** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும். செய்யும் தொழிலில் மேன்மை உண்டாகும்.

**மீனம்:** அலைச்சல் மிகுந்த நாள். தொழில் விஷயமாய் வெளியூர்களுக்கு அலையவேண்டிவரும். பணம் பற்றாக்குறையால் சிலர் கடன் வாங்க அலைந்து திரிவார்கள்.

**சந்திராட்டமநாள்: பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தராட்டாதி. ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் அவசியம் சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும்.**

# அமைச்சரவைத் தீர்மானங்கள் இனி ஊடகங்களுக்கு வழங்கப்படமாட்டா

## அரச தகவல் திணைக்களம் அதிரடி



அமைச்சரவையில் முன்வைக்கப்படுகின்ற அமைச்சர்களின் தீர்மானங்கள் மற்றும் யோசனைகள் இனிமேல் ஊடகங்களுக்கு வழங்கப்படுவதில்லை என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் உள்ளடங்காத அமைச்சரவை பத்திரங்களும் இவ்வாறு வெளியாக்கப்படுவது, தவறான நடவடிக்கை என்று அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி ரங்க கலன்சூரிய குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் இனிவரும் நாள்களில் இவ்வாறான தீர்மானங்களும் யோசனை களும் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தப்படாமலிருக்க அரசு தீர்மானித்துள்ளது. (எ)

# வடக்கின் அரசியல் தளம்பல் நிலையால் அனைத்து பணிகளிலும் பின்னடைவு

## வீதி திறப்பு நிகழ்வில் அமைச்சர் டெனீஸ்வரன்

மன்னார், ஜூன் 04

வடக்கின் அரசியலில் நிலவிய தளம்பல் நிலையால் பல்வேறுபட்ட பணிகளிலும் கடந்த சில வாரங்களாக பின்னடைவு நிலை காணப்பட்டது.

- இவ்வாறு அண்மையில் நடந்த நிகழ்வில் பேசும் போது குறிப்பிட்டார் டெனீஸ்வரன்.

வீதிகள் தரமானவையாக இருந்தால் தான் பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய முடியும்.

ஒருபகுதியின் முன்னேற்றத்துக்கு குறிப்பாக அங்கு விளைவிக்கப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் பொருள்களை கொண்டு சென்று சந்தை வாய்ப்பைப் பெறுவதற்கு வீதிகள் தரமானவையாக இருக்கவேண்டும் என்று வடக்கு போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் அபிவிருத்தி செய்யப்பட்ட மகிழங்குளம் - பள்ளமடு வீதி மக்கள் பாவனைக்காக கடந்த சனிக்கிழமை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்விலேயே அமைச்சர் கலந்துகொண்டு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடமாகாணம் முழுவதும் ஏறக்குறைய ஆயிரத்து 150 km வீதிகள் I-Road திட்டத்தின்மூலம் காப்பெற் வீதிகளாக புனரமைப்பதற்கு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. இவ்வருட இறுதிக்குள் அதற்கானபணிகள் ஆரம்பிக்கப்படும்.

வடமாகாணத்தில் சிறுபான்மையாக வாழுகின்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தன்னால் மேற்கொள்ளப் பட்ட திட்டத்துக்காக என் மீது குற்றம் சுமத்தப்படுள்ளமை எனக்கு வேதனை அளிக்கின்றது.

மாவட்டம் சார்ந்த அபிவிருத்திகளை நான் முன்னெடுத்துள்ளேன். நாயாத்து வெளி பகுதியில் வரவிருக்கின்ற மீன்பிடி பண்ணைக்காக ஆயிரம் ஏக்கர்கள் தமது அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 4 கோடி 100 லட்சம் ரூபா செலவில் பெரிய மீன்பிடிப் பண்ணைகள் அமைக்கப்படவுள்ளன. 3 வருடங்களுக்குள் அதன் பணிகள் நிறைவுபெற்று 5 ஆயிரம் வரையிலான மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். -என்றார். (எ)





மக்கள் வங்கியின் 55 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மக்கள் வங்கி யாழ். பிராந்திய இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் குருதிக் கொடை நிகழ்வு நேற்றுமுன்தினம் மக்கள் வங்கி , யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் நடைபெற்றது.

மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் க.சுசீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வங்கி ஊழியர்கள் மற்றும் அதன் வாடிக்கையாளர்கள் என 167 பேர் இரத்த தானம் வழங்கினர்.





மன்னார் பற்றிமா மத்திய மகாவித்தியாலயத்தில் கடந்த வருடம் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் அதிகூடிய சித்திகளைப் பெற்ற 10 மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் அருட்சகோதரர் ஜே.ஸ்டானிஸ்லாஸ் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் கலந்துகொண்டார்.

# புத்திஜீவிகளின் ஆலோசனையின்றியே இம்முறை பஸ் கட்டணங்கள் அதிகரிப்பு

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 4

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு நினைத்த பிரகாரம் பஸ் கட்டணத்தை அதிகரிக்க முடியாது. 2002 ஆம் ஆண்டு பஸ் கட்டண அதிகரிப்பு சம்பந்தமாகத் தீர்மானம் எடுப்பது தொடர்பில் புத்திஜீவிகள் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவிடம் எந்தவித ஆலோசனையும் இன்றியே இந்தக் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசு மேற்கொண்ட பஸ் கட்டண அதிகரிப்புக்கு எதிராக பயணிகள் சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமாக இருப்பினும், அவர்கள் அவ்வாறான நடவடிக்கைக்குச் செல்லாது தவிர்ந்து கொள்கின்றனர்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இம்முறை பஸ் கட்டணத்தை 6.28 வீதத்தால் அதிகரித்தது. இந்த அதிகரிப்பு நியாயமான முறையில் மேற்கொள்ள வேண்டும் என்று கோரி பய ணிகளுக்கோ அல்லது வேறு தரப்பினருக்கோ நீதிமன்றம் செல்லமுடியும். தற்போது அந்தத் தேவை எழுந்துள்ளது.

போக்குவரத்து ஆணைக்குழு எதனையும் சரியாகச் செய்வதில்லை. திருட்டுத்தனமாக போக்குவரத்து அனுமதிப் பத்திரத்தை மாத்திரம் ஒழுங்காக விநியோகித்து வருகின்றது.

இந்தக் கட்டணம் தொடர்பாக ஏற்படுத்தப்பட்டுள்ள சூத்திர முறை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். இந்த முறைமை 2018 ஆம் ஆண்டு எந்தவிதத்திலும் செயற்பாட்டுக்கு வரக்கூடாது. இந்தக் கட்டண அதிகரிப்பு பஸ் சாரதிகளுக்கும், நடத்துநர்களுக்குமே சிறந்தது.

அடுத்த வருடத்தில் மாற்றம் கொண்டு வரப்பட்டு கட்டணம் கிலோ மீற்றர் அடிப்படையில் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.-என்றார். (எ)

# பழ உற்பத்தியை அதிகரிக்க மத்திய வங்கி வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 04

பழ உற்பத்தியை அதிகரிப்பதன் தேவையை இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

ஏற்றுமதியாளர்கள் மத்தி யில் இதற்குக் கூடுதலான கேள்வி நிலவிய போதிலும் நாட்டில் பழ உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது.


உற்பத்தி மற்றும் ஏற்று மதியாளர்களுக்கு மத்தியில் நேரடித் தொடர்புகளை முன்னெடுப்பதற்கும் வர்த்தக உடன்படிக்கை களை அடிப்படையாகக் கொண்ட உற் பத்தி முறையை விரிவுபடுத்துவதுமே இதற்குத் தீர்வாகும் என்று மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் நாட்டின் பழ உற்பத்தி 15.6 சத வீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. கடந்த வருடத்தில் இது 6 சத வீதமாக மேலும் வீழ்ச்சியடைந்தது. இந்த நிலைக்கு மத்தியில் பழ இறக்குமதி அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்தில் பழ இறக்கு மதியை முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 19.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இதற்கமைவாக இந்த வருடத்தில் பழ இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு இடையில் வர்த்தக ரீதியிலான துண்டு விழும் தொகை 130 கோடி ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# சிறுபான்மையினரின் பிரச்சினைக்கு புதிய அரசமைப்பால் தீர்வு கிட்டும்!



இவ்வாறு கூறுகிறார் அரசமைப்பு மீளாய்வு மக்கள் பேரவையின் அதிகாரி பத்திராஜா

புதிய அரசமைப்பு சிறுபான்மை மக்களின் நீண்ட காலப் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதாக அமையும் என்று அரசமைப்பு மீளாய்வு மக்கள் பிரதிநிதிகள் பேரவையின் அதிகாரி எஸ்.வின்ஸ்டன் பத்திராஜா தெரிவித்தார்.

புதிய அரசமைப்பைத் தயாரித்தல் தொடர்பில் பொதுமக்களுக்குத் தெளிவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், மட்டக்களப்பு மாவட்ட மக்களின் கருத்தறியும் நிகழ்வு நேற்று முன்தினம் வின்சன்ட் தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த காலத்தில் நாடாளுமன்றத்தை மையமாக வைத்து உருவாக்கப்பட்ட இரண்டு அரசமைப்புகள் இந்த நாட்டுக்குப் பயன்பட்டன என்று நான் அறியவில்லை, நாட்டை முன்னேற்றவும் இல்லை. மாறாக 30 வருட கால உள்நாட்டு போர் ஒன்றுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டோம்.

அதன்மூலம் பெற்றுக் கொண்ட பாடங்களைக் கொண்டு, தற்போதைய அரசு, மக்களின் விருப் பங்களைக் கொண்டதாக புதிய அரசமைப்பை உரு வாக்கி, அதன் மூலமாக அனைத்து இன மக்களும் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற எண்ணத்துடன் ஒன்றுபட்டுப் பயணித்து, ஓர் இனத்தை இன்னுமோர் இனம் அரவணைத்து வாழும் நிலையை ஏற்படுத்தும் வகையில், இந்த புதிய அரசமைப்பை உருவாக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றது.-என்றார்.

அந்த அரசமைப்புகள் இனங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தாத காரணத்தால் அதனை தோல்வியான அரசமைப்புகளாகவே நோக்க வேண்டியுள்ளது. மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு, ஆளுநர்கள் நியமிக்கப்பட்டதைத் தவிர வேறு எந்த வெற்றியையும் அரசமைப்புகள் கொண்டிருக்கவில்லை என்பது உண்மையாகும்.

ஆனால், அதனைக் கொண்டு இனப் பிரச்சினைக்கான தீர்வையும் காணவில்லை.




பொன்.வேணு கிருஷ்ணா

பாகிஸ்தானை உலக பயங்கரவாதத்தின் தாய்க்கப்பல் என்று முத்திரையிட்டும், பாகிஸ்தானுக்குள் இருந்து இந்திய எதிர்ப்பு காஷ்மீர் பிரிவினைவாதிகளுக்கு வழங்கப்படும் அனைத்து தளவாட உதவிகளையும் இது நிறுத்தும் வரையிலும், பாகிஸ்தானுக்குள் சட்டவிரோத எல்லை தாண்டிய திடீர்ச் சோதனைகளை நடத்துவது குறித்த இந்தியாவின் உரிமையை உறுதிப்படுத்தியும், அதற்கு எதிராக ஒரு போரை நாடும் பிரசாரத்தை கடந்த ஆண்டு முழுவதிலும் மோடி அதிகமாக மேற்கொண்டார். ஞாயிறன்று அமெரிக்கா சென்று சேர்ந்தமையுடன், கடந்த செப்ரெம்பரில் பாகிஸ்தானுக்குள் இந்தியா நடத்திய ''நுட்பமான தாக்குதல்களை'' தம்பட்டம் அடிப்பதற்கான ஒரு முக்கிய செய்தியாக உருவாக்கிய மோடி, அதன் விளைவாக ''இந்த உலகம் எங்களது சக்தியை அறிந்துகொண்டதுடன், இந்தியா கட்டுப்பாட்டுடன் இருக்கிறது ஆனால், தேவைப்படும் போது அதனால் அதிகாரத்தைக் காட்டமுடியும் என்பதையும் உணர்ந்துகொண்டது'' என்றும் கூறுகிறார்.

ட்ரம்ப் மற்றும் மோடியின் சந்திப்பிற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர், நீண்ட கால இந்தியாவின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக அமெரிக்க அரசுத்துறையானது, பாகிஸ்தான் சார்புள்ள காஷ்மீர் பிரிவினைவாத அமைப்பான, ஹிஸ்புல் முஜாஹிதீன் (Hizbul Mujahideen) இன் தலைவரான சையத் சலாஹுதீனை ''உலக பயங்கரவாதி'' எனப் பெயரிட்டது.

இந்த நடவடிக்கையை வரவேற்று, பாகிஸ்தானிய ஆதரவிலான பயங்கரவாதத்தின் விளைவாக காஷ்மீரில் கடும் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது தொடர்பான புதுடில்லியின் நிலைப்பாட்டை அது ''நிரூபித்தது'' என்று இந் திய அதிகாரிகள் கூறினர்.

### தென் சீனக் கடல், வட கொரியா மற்றும் ஆப்கானிஸ்தான்

ஜனவரி 2015இல் ஒபாமாவுடன் வெளியிட்ட ஒரு கூட்டு அறிக்கையில் தென் சீனக் கடல் பிரச்சினை மீதான அமெரிக்க கதையாக்கத்தில் மோடி கையெழுத்திட்ட போது பென்டகனும், அமெரிக்க அரசுத்துறையும் பரவசமடைந்தன. அதிலிருந்து, சீன கடற்கரைப் பகுதியில் அதன் இராணுவத்தை நிலைநிறுத்தும் உரிமையை உறுதி செய்யும் விதமாக, ''கடல்வழி மற்றும் வான்வழி சுதந்திரம்'' ''கடல்வழி சுதந்திரம்'' மற்றும் ''வான்வழி'' என்ற பெயரில் பெய்ஜிங்கை ஓர் ஆக்கிரமிப்பாளராக சித்திரிப்பது போன்ற அமெரிக்க நிலைப்பாட்டை இந்தியா உண்மையிலேயே பின்பற்றிவிட்டது.

இந்திய அமெரிக்க தலைவர்களின் ஓர் உச்சிமாநாட்டில் இருந்து வெளிவரும் மிக சமீபத்திய அறிக்கைகளில், வடகொரியாமீதான ட்ரம்ப் நிர்வாகத்தின் நிலைப்பாட்டிற்கு புதுடில்லியின் உறுதியான ஆதரவு பற்றிய செய்தியே இருக்கிறது. சீனாவிற்கு அழுத்தம் கொடுப்பதற்கும், அச்சுறுத்துவதற்கும் கொரிய தீபகற்பத்தின் மீது ஒரு நெருக்கடியைத் தூண்டுவதற்கான வெளிப்படையான நோக்கத்துடன், பியோங்யாங் உடனான ''மூலோபாய பொறுமையை'' முடிவுக்கு கொண்டுவருவதாக வொஷிங்டன் அறிவித்தாலும், அதற்கு இந்தியா முழுமையான ஆதரவை அளித்துவருகிறது.

கூட்டு அறிக்கையின்படி, மோடியும், ட்ரம்பும் வட கொரியாவின் ''தொடர்ச்சியான ஆத்திரமூட்டல்களுக்கு'' ''கடுமையாக கண்டனம்'' தெரிவித்தனர், மேலும், ''இந்த திட்டங்களுக்கு ஆதரவளிக்கக்கூடிய அனைத்துத் தரப்பினரையும் கணக்கில் வைத்திருப்பது உட்பட, அதன் பேரழிவு ஆயுத திட்டங்களை'' ''எதிர்கொள்ள ஒன்றாக வேலை செய்யவும் உறுதிபூண்டனர்''.

பியோங்யாங் உடனான வொஷிங்டனின் அதிகரித்துவரும் பதற்றங்களை பராமரிப்பதில், இந்தியா சமீபத்தில் உணவு மற்றும் மருந்து தவிர வட கொரியா உடனான அனைத்து வர்த்தகத்தையும் நிறுத்தியது. அந்தத் தடையை விதிக்கும் வரை, சீனாவுக்கு அடுத்து வடகொரியாவின் இரண்டாவது மிகப் பெரிய வர்த்தகப் பங்காளராக இந்தியா இருந்தது.

வெள்ளை மாளிகை புல்வெளி பத்திரிகையாளர் மாநாட்டில், வட கொரியாவிற்கு எதிராக ''புதிய தடைகளை விதிப்பதில் அவர்களுடன் இணைந்ததற்கு'' ட்ரம்ப் இந்தியாவிற்கு நன்றி தெரிவித்ததுடன், ''வட கொரிய ஆட்சி பயங்கரமான பிரச்சினைகளை விளைவிக்கின்ற நிலையில், ஏதோவொன்று தீர்க்கப்பட வேண்டியதாக இருப்பின், அது அநேகமாக விரைவாக தீர்க்கப்படவேண்டும்'' என்றும் சேர்த்துக் கூறினார்.




அமெரிக்க ஆக்கிரமிப்பு போர் இப்போது பதினேழாம் ஆண்டில் உள்ள ஆப்கானிஸ்தானில் இரு நாடுகளும் ஒன்றாக இணைந்து செயல்படவிருப்பதாக கூட்டு அறிக்கை மேலும் தெரிவித்தது. ''இந்தியாவும் அமெரிக்காவும் ஆப்கானிஸ்தானை மீண்டும் கட்டமைப்பதிலும், அதன் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் ஒருமுக்கியபங்கைக்கொண்டிருப்பதாக'' கூறி, செய்தியாளர் மாநாட்டின்போது இந்த விடயத்தை மோடி மீண்டும் வலியுறுத்தினார். ஆப்கானிஸ்தான் குறித்து வொஷிங்டனுடன் ''நெருக்கமான ஆலோசனை மற்றும் தகவல் தொடர்புகளை பராமரிக்கவும்'' அவர் உறுதியளித்தார்.

**''அமெரிக்காவை மீண்டும் மகத்தானதாக உருவாக்குவது'' என்ற ட்ரம்பின் பார்வை ஒரு புதிய இந்தியாவை உருவாக்குவதற் கான அவரது திட்டங்களுடன் ஒருங்கிணைவதாகக் கூறி, இந்தியாவின் சமூக மற்றும் பொருளாதார மாற்றத்திற்கான நமது முதன்மை பங்காளியாக அமெரிக்காவை மோடி புகழ்ந்தார்.**

இந்திய தொழில்நுட்ப நிறுவனங்களால் பரவலாக பயன்படுத்தப்படுகின்ற ஏ1-B விசாக்களின் புதிய வரம்புகள் உட்பட, ட்ரம்பின் பொருளாதார தேசியவாத ''அமெரிக்காவின் முதல்'' கொள்கைகளின் தாக்கத்தின் மீதான தங்களது கவலைகளை மோடி எழுப்பவேண்டுமென இந்திய உயரடுக்கின் முக்கிய பிரிவுகள் விரும்பின. ஆனால், இந்திய முதலாளித்துவம் அதன் சொந்த வல்லரசாகும் இலட்சியங்களை புரிந்து கொள்ள மிகவும் முக்கியமானதாகக் கருதுகின்ற இந்திய அமெரிக்க மூலோபாய கூட்டணி மேலும் வலுப்படுவதை எந்தவொரு வகையிலும் தடை செய்யாமலிருக்க வொஷிங்டனுடனான கருத்து வேறுபாடுகளை குறைப்பதற்கு இந்திய பிரதமர் சிரமப்பட்டார்.

''அமெரிக்காவை மீண்டும் மகத்தானதாக உருவாக்குவது'' என்ற ட்ரம்பின் ''பார்வை'' ஒரு ''புதிய இந்தியாவை'' உருவாக்குவதற்கான அவரது திட்டங்களுடன் ஒருங்கிணைவதாகக் கூறி, ''இந்தியாவின் சமூக மற்றும் பொருளாதார மாற்றத்திற்கான நமது முதன்மை பங்காளியாக'' அமெரிக்காவை மோடி புகழ்ந்தார், மேலும் என்னுடன் மிக அதிகமான நேரம் செலவழித்தமைக்கு என்ற விதமாக மிகுந்த பணிவான மொழியில் மீண்டும் மீண்டும் மோடி ட்ரம்புக்கு அவரது நன்றியை வெளிப்படுத்தினார்.



மோடியின் பெரு வணிக சார்பு கொள்கைகளுக்காக அவரை ட்ரம்ப் பாராட்டியபோதிலும், அமெரிக்க முதலீட்டிற்கும், ஏற்றுமதிக்கும் இந்தியாவின் பொருளாதாரத்தை ஏற்றதாக வைப்பதற்கு மோடி அரசாங்கம் அதிகளவில் செயலாற்றுமென அவர் எதிர்பார்ப்பதை தெளிவுபடுத்தினார்.

நடந்த உச்சி மாநாட்டிற்கு முன்னர், ட்ரம்ப் பற்றியும், மேலும் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் மற்றும் ஒபாமா இருவரும் அளித்த அளவுக்கு அவரது நிர்வாகமும் இந்தியாவுடனான உறவுகளுக்கு முன்னுரிமை அளிக்குமா என்பது பற்றியும் இந்திய பத்திரிகைகளில் பெருமளவு ஆர்வம் நிறைந்த வர்ணனைகள் இருந்தன. ஆயினும், அதன் பின்னர், இந்தியாவின் பெருநிறுவன செய்தி ஊடகத்திடமிருந்து ஒரு கூட்டு நிம்மதிப் பெருமூச்சு இருந்தது.

இதற்கிடையில், வொஷிங்டனுடன் இந்தியா அதனை சீரமைத்திருக்கும் அளவிற்கு அதிகரித்தளவில் சீனாவும் வளர்ந்துள்ளது. திங்களன்று வெளியான ஒரு கருத்தில், சமீபத்திய ஆண்டுகளில், ''இந்தியா மீதான புவிசார் அரசியல் அழுத்தத்தை முடுக்கிவிடுவதற்காக'', ''அமெரிக்கா இந்தியாவுடன் இணைந்திருக்கிறது'' என்று அரசுக்குச் சொந்தமான Global Times பத்திரிகை குறிப்பிட்டது.

ஓர் அப்பட்டமான பின்வரும் எச்சரிக்கையுடன் இது தொடர்கிறது: ''சீனாவைக் கட்டுப்படுத்தும் அமெரிக்க மூலோபாயத்தில் ஒரு புறகாவல் நாடு எனும் ஒரு பாத்திரத்தை வகிப்பதாக கருதுவது இந்திய நலன்களுக்கு இணக்கமானதாக இல்லை. இது பேரழிவு தரும் விளைவுகளுக்கு கூட வழிவகுக்கும்''.

### கட்டாருக்கு விடுக்கப்பட்ட சவுதியின் இறுதி எச்சரிக்கை

கடந்தவாரம் சவுதி அரேபியாவும், அதன் நட்பு நாடுகளான எகிப்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் பஹ்ரைன் ஆகியவையும் கட்டாருக்கு விடுத்த 10 நாள் இறுதி எச்சரிக்கையானது, சிறிய பாரசீக வளைகுடா நாட்டுடன் அவர்களது மோதலை பெரியளவில் தீவிரமடையச் செய்து இராணுவ மோதலுக்கான வாய்ப்பை அதிகரித்துள்ளது.

இந்த மாத தொடக்கத்தில் திணிக்கப்பட்ட இராஜதந்திர, பயண மற்றும் வர்த்தக முற்றுகைகளுக்கு அப்பால், மேலதிகதண்டனைநடவடிக்கைகளுக்கு சாக்குப்போக்கை உருவாக்கும் விதத்தில், கட்டாரால் நிராகரிப்பதற்காகவே வடிவமைக்கப்பட்ட கோரிக்கைகளை சவுதி முடியாட்சி வெளியிட்டது. பயங்கரவாத மற்றும் குற்றவியல் குழுக்களை சிதைப்பதற்கு மட்டும் கட்டார் தேவைப்படுகிறது என்றில்லாமல், அதன் அல் ஜசீரா செய்தி வலையமைப்பை மூடவும், ஈரானுடனான உறவுகளை கடுமையாக குறைக்கவும், துருக்கிய இராணுவ படைகளை வெளியேற்றவும், ரியாத் ஆணையிடும் இராஜதந்திர, இராணுவ மற்றும் பொருளாதார நிலைப் பாட்டை பின்பற்றவும், மேலும், அதன் கொள்கைகள் விளைவித்ததாகக் கூறப்படும் சேதங்களுக்குக் குறிப்பிடப்படாத இழப்பீடுகளை செலுத்தவும் அது தேவைப்படுகிறது. அடுத்த 10 ஆண்டுகளுக்கு ஊடுருவல் கண்காணிப்புக்கள் மூலம் இவை அனைத்தும் அவதானிக்கப்படவேண்டும்.

(கேள்வி தொடரும்)

காலைக்கதிர்
Kalaikkathir





# சுதந்திர வேட்கை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கி பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

23




## அத்தியாயம் - II

## இறுதி முடிவுகள்

வரலாற்று நாயகனான பிரபாகரனையும் விடுதலைப் புலிப் போராளிகளையும் நேர்நேராகச் சந்தித்து, அவர்களுடன் கூடி வாழக்கிடைத்த அரிய பெருமையுடன் இலண்டன் திரும்பினோம். லண்டனில் இருக்கும் போது, சென்னைக்கோ யாழ்ப்பாணத்துக்கோ திரும்பிச் செல்லும் அந்த நாளுக்காகக் காத்து இருந்தோம். இந்தியப் பயணத்தின்பின் அரசியல் ரீதியில் முழுமையாக எம்மை அர்ப்பணித்தமை போலவே, உளரீதியிலும் எம்மை அர்ப்பணித்திருந்தோம். போராட்ட களத்திலிருந்து ஆயிரம் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் நாற்காலியில் உட்கார்ந்தபடி கற்பனாவாத அரசியல் பற்றி பேசுவதை விட்டுவிட்டு களத்துக்கு நேரே சென்று பங்கெடுக்க விரும்பினோம். இயக்கத்தோடு தொடர்ந்தும் தொடர்பைப் பேணினோம். இலண்டனில் எமது அரசியல் பணியையும் புரிந்தோம். அதேசமயம், பாலா அரை மனதோடு தனது கலாநிதி ஆய்வைத் தொடர்ந்தார். வெற்றுக் கருத்தியல் தத்துவார்த்தங்களால் யாருக்கு என்ன பயன் என்பதே அவர் கொண்டிருந்த கருத்தாக இருந்தது. வருமானம் தேவை என்பதால் இலண்டனில் உள்ள பெரிய மருத்துவமனை ஒன்றில் இரவு வேளையில் பணிபுரியும் மரத்துவத் தாதியாக வேலையில் சேர்ந்தேன். விரைவிலே இந்தியாவுக்கோ இலங்கைக்கோ திரும்பிச் செல்வோம் என்ற எதிர்பார்ப்போடு நாள்களை ஓட்டினேன். ஏனென்றால், உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் தாதித் தொழிலில் சலிப்பு அடைந்து இருந்தேன். மருத்துவத் தாதித் தொழில் எனது அடிப்படைத் தொழில். அதைவிட எனக்கு வேறு தொழில் தகைமைகளும் கல்வித்துறைத் தகைமைகளும் இருந்தன. ஆகவே, அவற்றை ஏன் பயன்படுத்தக்கூடாது அல்லது அவற்றை மேலும் ஏன் வளர்த்துக்கொள்ளக்கூடாது என்று கேட்கத் தோன்றியது. தாதித் தொழிலில் இருந்த ஒரே வாய்ப்பு என்னவென்றால் எனது தொழில் நேரத்தை நானே தெரிவு செய்யலாம் என்பதே. அதைவிட, தாதித்தொழில் ஆயாசம் தருவதாகவே இருந்தது.

பார்க்கும் தொழிலால் ஏற்பட்ட சலிப்பை ஒருபுறம் ஒதுக்கிவிட்டாலும், குடும்பத்தைப் பற்றியும் நான் சிந்திக்க வேண்டியிருந்தது. பல ஆண்டுகளாக பிள்ளைகளைப் பெறுவதைப் பற்றி சிந்திக்காமலே விட்டிருந்தேன். எனது வாலிப வயதிலும் இளம் பெண்ணாக இருக்கும் போதும் குழந்தைகள் பெற வேண்டும் என்று பேசுவதும் சிந்திப்பதுமாக இருந்தேன். ஆனால், வளர வளர அதைப் பற்றிப் பேசுவதோ சிந்திப்பதோ குறைந்தது. தாய்மை எய்த வேண்டும் என்ற நினைவே அற்றுப் போயிற்று. இப்போது திருமணமாகி மூன்று ஆண்டுகள் கழிய, முப்பத்தியொரு வயதில் எல்லாவற்றையும் தூக்கி எறிந்து விட்டு ஆயுதப் போராட்டத்தில் பங்கு கொள்ளவேண்டும் என்று விரும்பிக்கொண்டு இருக்கும் வேளையில் தாய்மை எய்துதல் உட்பட நான் தெரிவு செய்யக் கூடிய அனைத்து வழிகளையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று நினைத்தேன். நான் ஏன் கர்ப்பமாகவில்லை என்பது சென்னையில் உள்ள போராளிகளுக்கு புதிராகவே இருந்தது. ஆனால், அதில் தவறு ஏதும் இல்லை. தமிழகக் கலாசாரத்தில், திருமணமான உடனே கர்ப்பம் தரிப்பதும் தாய்மை எய்துவதும் ஒன்றன் பின் ஒன்றாக நிகழ்வது இயல்பு. திருமணமாகி முதல் இரண்டு ஆண்டுகளுக்குள்ளேயே ஒரு குழந்தையைப் பெற்றுவிட வேண்டும் என்று எந்தப் பெண்ணும் எதிர்பார்க்கப்படுவாள். பெரும்பாலான பெண்கள் முதல் ஆண்டிலேயே பிள்ளையைப் பெற்று விடுவார்கள். பேசிக் கட்டும் திருமணத்தில் மகப்பேறு, உறவைப் பலப்படுத்தி குடும்பச் சூழலை உருவாக்கிவிடும். இது ஒவ்வொருவர் மீதும் பரஸ்பரம் சில பொறுப்புகளைச் சுமத்தும், இதன் பின் கணவன் மனைவியிடையே சுமுக நிலை நிலவாவிட்டாலும், குடும்பத்திலிருந்து உறவை முறித்துக் கொள்வது சுலபமாகிவிடாது. திருமணம் புரியும்போதுஎனது நோக்கம் பிள்ளைகளைப் பெறுவது அல்ல. நான் விரும்பிய மனிதரை மணந்து அவரோடு வாழ்வது சமூகத்தில் ஏற்கப்படவேண்டும் என்பதற்காகவே திருமணம் புரிந்து கொண்டேன். பிள்ளைகளைப் பெற்று ஒரே குடும்ப வாழ்க்கையைத் தொடங்க வேண்டும் என்பதற்காக நான் திருமணம் செய்யவில்லை. வேரோடிப் போன வாழ்க்கை முறைகளோடு மக்கள் எவ்வளவுக்கு ஆழ்ந்து போயிருந்தார்கள் என்பது என்னை மலைக்க வைத்தது. வெவ்வேறு விதமான வாழ்க்கைப் பாங்குகளை உலகம் ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு முன்னேறியிருப்பதாக நான் நினைத்திருந்தேன். ஆனால், சமூக வரம்புகளுக்கு வெளியே வரும்போது தான் சமுதாயக் கண்ணோட்டங்கள் எவ்வளவு வேரூன்றி இருக்கின்றன என்பது தெரியும். நான் சென்னையில் இருந்தபோது பிள்ளை பெறுவது பற்றி போராளிகள் விசாரிக்கும்போது நான் அதை பொறுத்துக் கொண்டேன். திருமணம், தாய்மை ஆகியன தொடர்பாக அவர்களுடைய கலாசாரக் கருத்துகளே அவர்களது கேள்விகளில் பிரதிபலித்தன. மலட்டுத் தன்மை உடைய ஒருவர், அதை மூடிமறைப்பதற்காக, பிள்ளை வேண்டாம் என்று கூறுகிறார் எனக் கருதுவார்கள். இங்கிலாந்திலே வேலைத்தளத்திலே என்னோடு வேலை செய்தவர்கள் கூட, திருமணம் ஆன ஒரு பெண்ணுக்கு தாய்மையே பிரதானமானது என்று நேருக்கு நேர் வாதிடுவதைப் பல தடவை கேட்டிருக்கிறேன். தாய்மையைத் தேர்ந்தெடுக்காது விட்டமைக்காக என்னில் ஏதோ குறைபாடு இருக்கின்றது எனவும் சில பெண்கள் கருதினார்கள். சிலர் எடுத்த எடுப்பிலேயே பகைமை பாராட்டினார்கள். ஒரு சந்தர்ப்பம் நினைவுக்கு வருகிறது. அப்போது மகப்பேறு தொடர்பாக நான் இறுதி முடிவுக்கு வந்திருக்கவில்லை. நான்கு ஐந்து பேர் ஒன்றாக இருந்து குழந்தைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். எனக்கு குழந்தை இல்லை என்று கூறினேன். உடனடியாக ஒருவர் குதித்து எழுந்தார். குழந்தை பெறுவதைவிட வேலை செய்து பணம் சம்பாதிக்க முயலும் பேராசை கொண்ட ஒரு சுயநலவாதி என்று என்னைத் திட்டினார். வேறு சிலரும் அவரை ஆதரித்தார்கள். நாம் ஒட்டாண்டிகள் என்பதும் கையிலே பணம் புழங்கினால் நான் இரவு வேலைக்கு சென்றிருக்கமாட்டேன் என்பதும் அவர்களுக்குத் தெரியாது. இத்தகைய ஈவிரக்கமற்ற கண்டனங்கள் என்னைத் திகைக்க வைத்தன. மற்றவர்கள் என்னைப் பற்றி கொண்டிருந்த கருத்துப்பற்றி சிந்திக்க வைத்தன. அவர்களுடைய கண்டனம் சரிதானா என்று என்னையே நான் கேட்டுக் கொண்டேன். ஆனாலும், எனது முடிவை அவர்களுடைய கண்டனங்கள் பாதிக்கவில்லை. எனது தொழில் அனுபவம் காரணமாகத் தாய்மை, நோக்காடு, பிரசவம் ஆகியவை தொடர்பாக நீண்ட நாள்களாக நான் உயர்ந்த எண்ணம் கொண்டிருக்கவில்லை. இருபத்தியொரு வயதில் மகிழ்ச்சியுடனேயே இளம் மருத்துவிச்சியாகப் பணிபுரிந்து கொண்டிருந்தேன். தாய்மையோ, நோக்காடோ, பிரசவமோ என்னைப் பெரிதாக அப்போது ஈர்க்கவில்லை. இனி உடல் நலன் பராமரிப்பாளராக நான் பணியாற்றியபோதெல்லாம் பிள்ளைகளை வளர்ப்பதிலேயே தமது முழு நேரத்தையும் பெண்கள் செலுத்திக் கொண்டிருக்கின்றமை என்னை அவ்வளவாகக் கவரவில்லை. இதற்கு மேலாக வாழ்க்கையில் அர்த்தங்கள் உள்ளன எனக் கருதினேன்.நான் இருபத்தி இரண்டு அல்லது இருபத்தி மூன்று வயதில் மணம் புரிந்திருந்தால் நிலைமை வேறாக இருந்திருக்கலாம். ஆனால், நான் திருமணம் செய்தபோது எனது வாழ்வு நகரத் தொடங்கிவிட்டது. இருபத்தியேழு வயதில் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தேன். இந்தக் காலத்தில் குழந்தைகளைப் பற்றி சிந்திக்கவேயில்லை. அதன் பின் அரசியலுக்குள் புகுந்ததும் அது முற்றிலும் வேறு உலகமாக இருந்தது; பச்சையாகக் கூறுவதானால் நான் எனது கணவருடன் மகிழ்ச்சியாகவே இருந்தேன். என்னைப் பற்றிய தெளிவான உணர்வே எனக்கு இருந்தது; சுதந்திரமான உணர்வே எனக்குள் மேலோங்கி நின்றது. உலகம் முழுவதும் என் முன்னே விரிந்து கிடக்க, ஒன்றிரண்டு குழந்தைகளோடு என்னையே நான் கட்டிப் போடுவதை நினைத்துப் பார்க்க முடியவில்லை. இந்தக் கால கட்டத்தில் எனது சிந்தனை பல இலட்சம் மைலுக்கு அப்பால் சென்றிருந்தது. தனிப்பட்ட குடும்ப வாழ்க்கைக்கு அப்பால் ஓர் இலட்சிய வாழ்க்கைக்காக மனம் ஏங்கியது. ஒடுக்கப்பட்ட மக்கள் மட்டிலும் வறியவர்கள் மட்டிலும் எனது கரிசனை திரும்பியிருந்தது; அவர்களுக்குத் தொண்டு செய்யவே உண்மையில் விரும்பினேன். தேசிய விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்ட பெண்கள் பற்றி ஆழமாகவும் சுதந்திரப் போராட்டங்களில் ஈடுபட்ட பெண்கள் பற்றி பொதுவாக நிறையப் படித்திருந்தேன். கணிசமான அளவு அரசியல் மயப்படுத்தப்பட்டும் இருந்தேன். என்னைக் காட்டிலும் தாழ் நிலையில் உள்ள மக்களுக்கு அதாவது ஒடுக்கப்பட்டவர்களுக்கு, வறியவர்களுக்கு, உதவி தேவைப்பட்டவர்களுக்கு பணி புரிவதே சிறந்தது என்று உணர்ந்தேன்.



(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir



# அமெரிக்காவில் சாதனை படைத்த தமிழ் மாணவன் நிருபன்



அமெரிக்காவில் கல்வி கற்று வரும் தமிழ் மாணவனான நிருபன் பகிதரன் அதிக புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

Technology High School, Newark இல் உயர்தரக் கல்வியைக் கற்று அதி கூடிய புள்ளிகளைப் பெற்று, முதல் நிலை மாணவனாக தன்னைப் பதிவு செய்துள்ளார்.

இதன் காரணமாக பல் கலைக் கழகத்தில் மருத்துவ, பொறியியல் துறைகளில் கல்வி கற்கத் தகைமை பெற்றுள்ளார். Rutgers University புலமைப்பரிசில் வழங்கி, கல்வியைத் தொடரவாய்ப்பளித்துள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பகிதரன் - கமலேஸ்வரி தம்பதியரின் புதல்வரான நிருபன் ஜேர்மனியைப் பிறப்பிடமாகக் கொண்டுள்ளார். தற்போது அமெரிக்காவில் வசித்து வருகிறார்.

நிருபன் தனது பாடசாலையில் National Honor Society President ஆகவும், தனது வகுப்பு மாணவத் தலைவனாகவும் இருந்து வந்துள்ளார்.

பாடசாலையில் நடைபெறும் இயல், இசை, நாடக நிகழ்வுகளில் பங்குபற்றி வந்தார் அத்துடன், மாணவர்கள் கல்விச் சுற்றுலா செல்வதற்கான ஏற்பாடுகளையும் செய்து வந்தார்.

இவருக்கு Valedictorian Award, National Honor Society President Award, Leadership Award போன்றவற்றை பாடசாலை வழங்கி கௌரவித்துள்ளதுடன், தனது 7 வயதில் கட்டுரைப் போட்டியில் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டமைக்காக, Newark Major Sharp James சிறப்புப் பரிசில் வழங்கிக் கௌரவித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆங்கிலம், ஸ்பானிஸ் மொழிகளில் திறமை பெற்ற நிருபன், தமிழ் மொழியையும் கற்று வருகிறார், எமது கலை, கலாசார நிகழ்வுகளிலும் பங்கு பற்றி தனது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றார்.

கடந்த வருடம், இலங்கைத் தமிழ்ச் சங்கம், அமெரிக்கா நடத்திய கட்டுரைப் போட்டியில் நிருபன் இரண்டாம் இடத்தைப் பெற்றமைக்காக முன்னாள் ஐ.நா. சபையின் மனித உரிமைகள் ஆணையாளரும், நீதிபதியுமான நவநீதம்பிள்ளை வெற்றிக் கிண்ணத்தை வழங்கிக் கௌரவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# கனடா நாகபூஷணி அம்மன் ஆலய மஹோற்சவம் ஆரம்பம்

கனேடிய நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவ நிகழ்வின் ஆரம்ப நிகழ்வான கொடியேற்ற நிகழ்வு கடந்த 24 ஆம் திகதி மிகவும் சிறப்பாக நடந்தேறியது.

சிவாச்சாரியார் திலகம் குகனேஸ்வரக் குருக்கள் ஆகம விதிகளுக்கு அமைவாகக் கொடியேற்றக் கிரியைகளை நடத்தினார். ஏராளமான அந்தணப் பெருந்தகைகள் சூழ கொடியேற்ற வைபவம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து 16 தினங்கள் பெருவிழா இடம்பெற உள்ளது.






# சிறப்பாக நடைபெற்றுவரும் கனடா கந்தன் ஆலய புதிய கட்டடப் புனரமைப்புப் பணிகள்



கனடா கந்தன் ஆலயத்தின் புதிய கட்டடப் புனரமைப்புப் பணிகள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

இந்தப்பணிகளை கடந்த 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஊடகவியலாளர்கள் பார்வையிட்டனர்.

எதுவித தங்கு தடைகளும் இன்றி பணிகள் நடை பெறுகின்றன என நிர்வாக சபையினர் மற்றும் கட்டட தொழில்நுட்பவியலாளர்கள் தெரிவித்தனர்.

2018ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் காணவுள்ள கனடா கந்தன் ஆலயம் புதிய தொழில்நுட்ப அனுபவம் வாய்ந்த கட்டடக் கலை ஞர்களது திட்டமிடலுடன் மாநகர சபையின் விதிகளுக்கமைவாக நடை பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தாயக உறவுகளுக்கு எம்மாலான உதவிகளை வழங்குவதற்கு அனைவரும் முன்வர வேண்டும்

## லண்டன் சிவன் அறக்கட்டளை கிளை நடத்திய சங்கீத இசைக் கச்சேரியில் சுவிஸ் கவுன்ஸிலர் கருத்து

இடம்பெயர்ந்த உலகில் நாம் நிம்மதியாகவும் மன மகிழ்ச்சியுடனும் வாழ்ந்து கொண்டு இருப்பதில் அர்த்தமில்லை. எமது தமிழ் இனத்தின் தாயக உறவுகளுக்காக எம்மால் எவை எல்லாம் செய்ய முடியுமோ அவைகளைச் செய்து உதவுவதற்கு முன்வருதல் வேண்டும் என்று தெரிவித்தார் சுவிஸ் நாட்டின் கவுன்சிலர் தர்சிகா கிருஷ்ணானந்தம்.

சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் லண்டன் கிளையின் ஏற்பாட்டில் சங்கீத இசைக்கச்சேரி நிகழ்வு ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் லண்டன் லூசியம் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சகல மனிதர்களுக்கும் எம்மால் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யா விட்டால் உலகில் பிறந்தமைக்கு எவ்வித அர்த்தங்களும் கிடையாது என்பார்கள். அந்த வகையில் கணேஸ்வரன் வேலாயுதம் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு ஆற்றுகின்ற பணியின் மூலம் அவர் கடவுளால் அனுப்பப்பட்ட மாமனிதர்என்று எல்லோரும் கூறுகின்றனர், ஏழை எளிய மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக அவர் சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் மூலம் ஆற்றுகின்ற பணி ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது.



அதே போன்று ஏழை மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக அவர் ஆற்றுகின்ற பணி மிகவும் வியந்து பாராட்டத்தக்கதாக அமைந்துள்ளது.

இவை மட்டுமல்ல எமது தாயகத்திலுள்ள வீர வீராங்கனைகளுடைய விளையாட்டுத் தேவைகளையும் அவர்கள் பூர்த்தி செய்து வருகின்றனர். இந்த தன்னலமற்ற சேவைகளை வழங்கி தங்களுடைய இனத்துக்கு ஆற்றி வரும் கணேஸ்வரன் வேலாயுதத்தின் பங்களிப்பைப் பற்றிக்கூறிப்பாராட்டுவதற்கு என்னிடம் வார்த்தைகள் இல்லை.

எமது தமிழ் இனம் மூன்று தசாப்த காலமாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக உயிர்களையும் உறவுகளையும் இழந்து நிற்கின்றோம். இப்பொழுது எங்களுக்குத் தேவையானது ஒரே ஒரு போராட்டம் கல்விப் பேராட்டமாகும். குறிப்பாக புலம்பெயர்ந்த நாட்டில் தமிழ் பெண்கள் ஓர் உயர்ந்த நிலையில் இருக்கின்றோம். தமது தொப்புள் கொடி உறவுகளுக்காக எங்களுடைய பெண்களின் பங்களிப்பு அவசியமாகும். அதற்காக அங்கு சென்று சேவைகளை வழங்க வேண்டும். அல்லது சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் மூலமாகவோ அல்லது ஏதோ ஒரு வகையிலோ எங்களுடைய பங்களிப்பும் எமது தாய் மண்ணுக்குச் சென்றடைய வேண்டும்.- என்றார்.

இதில் சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநர் கணேஸ்வரன் வேலாயுதத்தின் மனிதாபிமானப் பணியை ஊக்குவிக்கும் வகையில் அங்கு வருகை தந்த பிரமுகர்கள் தங்களது பங்களிப்பையும் வழங்கி இருந்தனர்.

தொடர்ந்து கர்நாடக சங்கீத இசைக் கச்சேரி குழுவினரின் நிகழ்வும் இடம் பெற்றது. இதில் முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## போலி நாணயத்தாள்களுடன் நாத்தாண்டியாவில் மூவர் கைது

மாரவில - நாத்தாண்டிய பகுதியில் போலி நாணயத் தாள்களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாரவில பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போது, ஐந்தாயிரம் ரூபா போலி நாணயத்தாளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளில் மேலும் இருவர் கைதாகினர்.

அவர்கள் வசம் இருந்து ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் 16, கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை மாரவில நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மாரவில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## ஐ.நாவின் விசேட நிபுணர் மூவர் இலங்கைக்கு விரைவில் வருவர்!

### அரசின் பொறுப்புக்கூறல் தொடர்பில் ஆராய்வதற்காக

இலங்கையின் தற்போதைய மனித உரிமை நிலைமைகள், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை, பொறுப்புக்கூறல் செயற்பாடுகள் என்பன தொடர்பில் மதிப்பீடு செய்யும் நோக்கில் ஐக்கிய நாடுகளின் மூன்று விசேட நிபுணர்கள் விரைவில் இலங்கை வரவுள்ளனர்.

அத்துடன் ஐக்கிய நாடுகளின் செயற்குழு ஒன்றும் இலங்கைக்கு வரவுள்ளது.

அந்தவகையில் மனித உரிமையைப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்குமான விசேட நிபுணர் ஒருவர் இம்மாதம் இலங்கை வர உள்ளார்.

அத்துடன் சுதந்திரமாகக் கருத்துக்களை வெளிப்படுத்துவதை ஊக்குவிப்பதற்கும் பாதுகாப்பதற்குமான விசேட அறிக்கையாளர் ஒருவரும் மற்றும் உண்மை, நீதி நஷ்டஈடு, மீள் நிகழாமை தொடர்பான விசேடநிபுணர் ஒருவரும் இவ்வருடத்தில் இலங்கைக்கு வரவுள்ளனர்.

பலவந்தமாக தடுத்து வைத்தல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் செயற்குழுவும் இவ்வருடம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையில் இவ் வருடம் மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணையின் பிரகாரமே இலங்கை அரசு இவ்வாறு ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணர்களுக்கும் செயற்குழுவுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

## விவசாய அபிவிருத்தி குறித்த ஒப்பந்தம்; இலங்கை - நாணய நிதியம் கைச்சாத்து!

இலங்கை அரசுக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தம் ஒன்று இத்தாலி தலைநகர் ரோம் நகரில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.




இலங்கை அரசு சார்பில் நிதி மற்றும் தகவல் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ் சமரதுங்கவும் சர்வதேச நாணய நிதியத்தின் விவசாய அபிவிருத்திக்குப் பொறுப்பான அதிகாரி ஹில்பட் எவ் ஒன்போவும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த வேலைத்திட்டம் அரச, தனியார் மற்றும் பொதுமக்களின் பங்களிப்புடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தச் செயற்பாடுகளுக்குத் தேவையான நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குவதும் இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும். கிராமங்களில் வறுமை கோட்டின் கீழ் வாழும் 57 ஆயிரத்திற்கும் அதிகமான குடும்பங்களின் வாழ்வாதார தேவைகளைப் பூர்த்தி செய்து தமது உற்பத்தி மற்றும் வியாபார நடவடிக்கைகளை அதிகரித்து அதன் மூலம் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதும் இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும்.

சிறு விவசாய உற்பத்தித் திட்டம், விவசாய உற்பத்திகளை விநியோகித்தல் மற்றும் சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தல் ஆகிய பணிகளும் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் சிறியளவில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் விவசாயிகளின் உற்பத்திகள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வேலைவாய்ப்புகள் கணிசமான அளவு அதிகரிக்கும் அதேவேளை கிராமப்புறங்களில் வீட்டுத்தோட்ட விவசாய உற்பத்திகளை உணவாக கொள்ளும் அளவு அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## பல்கலை மாணவர் மீதான தாக்குதல்; விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பு!

பல்கலைக்கழக மாணவர் மீதான தாக்குதல்கள் தொடர்பான பொலிஸ் மா அதிபரின் விசாரணை அறிக்கை பொலிஸ் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரத்தில் இந்த அறிக்கை பொலிஸ் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டதாக ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாச குரே தெரிவித்துள்ளார்.

இதன்படி அந்த அறிக்கை நாளைமறுதினம் வியாழக்கிழமை ஆணைக்குழுவின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

இந்த விசாரணையின் போது எதிர்காலத்தில் எடுக்கப்பட நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாலபே தனியார் மருத்துவக்கல்லூரிக்கு எதிராக பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய போராட்டத்தின் போது 80 மாணவர்கள் காயமடைந்தனர் என்று குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு காவல்துறை ஆணைக்குழு, பொலிஸ் மா அதிபரிடம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தியாகத்துக்கும் இழப்புகளுக்கும் நிகரான அரசியல் தீர்வே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு

### சமூக நீதிக்கான மக்கள் அமைப்பாளர் சந்திரகுமார் கூறுகிறார்

தமிழ் மக்கள் தாங்கள் இழந்த இழப்புக்களுக்கும், செய்த தியாகத்துக்கும் நிகரான நியாயமான அரசியல் தீர்வையே எதிர்பார்க்கின்றனர் என்று சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் அமைப்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, உதயநகர் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இளைஞர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் மக்கள் எதற்காக தியாகங்களை செய்தார்களோ எதற்காக இழப்புக்களைச் சந்தித்தார்களோ, அதற்கான நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும்.





அதற்கு தமிழ் மக்களின் அங்கீகாரத்தை பெற்றவர்கள் கடுமையாக உழைக்க வேண்டும். கடுமையான உழைப்பின் மூலம் மக்களின் எந்தப் பிரச்சினைகளையும் தீர்க்கலாம் என்பது யதார்த்தம். மாறாக புறக்காரணிகளைக் கூறிக் கொண்டிருப்பவர்கள் இயலாமையுடையவர்களே.

போராட்டக் காலத்தில் எந்த தியாகத்தையும் செய்யாதவர்கள் இப்போது அதன் வலிகளை அதிகம் சுமந்தவர்கள் போல் பேசி வருகின்றார்கள்.

அத்துடன், நாடாளுமன்றத்திலும் அடிக்கடி ஊடகங்களில் செய்தி வரும் வகையில் பேசுகின்றார்கள். ஆனால் இவையெல்லாம் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து விடாது. மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அர்ப்பணமாக உழைக்க வேண்டும். அதற்காகவே மக்கள் தங்களின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்கின்றார்கள். ஆனால், மக்களின் எதிர்பார்ப்புகள் எவையும் நிவர்த்தி செய்யப்படுவதாகத் தெரியவில்லை. தற்போதைய சூழ்நிலையில் மக்கள் கைவிடப்பட்டவர்களாக நிர்க்கதியான நிலையில் காணப்படுகின்றனர்.

தற்போது புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்காக மாற்றத்தை நோக்கி தாங்களாகவே இளைஞர்கள் முன்வந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இளைஞர்களின் சக்தி என்பது மிகவும் பலமானது. அவர்கள் ஒருநோக்கத்துக்காகஒன்று சேர்வர் அது இலகுவில் அடையப்படுகிறது.

எனவே, இளைஞர் சமூகத்தில் ஏற்படுகின்ற மாற்றம் சமூகத்தில் ஏற்படுகின்ற மாற்றமாகவே காணப்படும். அந்த வகையில் அந்த மாற்றத்துக்கு நாங்களும் உறுதுணையாக இருப்போம்.-என்றார்.

இந்தச் சந்திப்பில் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் செயற்பாட்டாளர்களான அன்ரன் அன்பழகன், தணிகாசலம், மற்றும் இளைஞர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.(எ)

## ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 04

அமரர் சின்னட்டியன் பசுபதி ஞாபகார்த்த நிதியத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு, நாவலம்பதி ஞானவைரவர் ஆலய குரு சிவஸ்ரீ கிருஷ்ண மூர்த்திக் குருக்களின் ஆசியுரையுடன் ஆரம்பமாகும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் கலந்து கொள்வார். (ச)

## பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜூலை 04

தென்மராட்சி மந்துவில் வடக்கு தச்சக்காடு வயல் அண்ணமார் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும். (ச)

# ஜி.எஸ்.ரி. வரிக்கு ஆதரவு தெரிவித்து துரோகம் இழைத்துவிட்டது அ.தி.மு.க.!

## சாடுகிறார் ஸ்டாலின்

பூந்தமல்லி, ஜூலை 04

ஜி.எஸ்.ரி. வரிக்கு ஆதரவு தெரிவித்து அ.தி.மு.க. அரசு துரோகம் இழைத்துவிட்டது. -இவ்வாறு தி.மு.க. செயல் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ஸ்டாலின் தெரிவித்தார்.

தி.மு.க. பொதுக்கூட்டம் காஞ்சிபுரம் பூந்தமல்லி பகுதியில் உள்ள அண்ணா திடலில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜி.எஸ்.ரியை நாங்கள் முழுமையாக எதிர்க்கவில்லை. விவசாயிகள், வியாபாரிகள் மற்றும் உணவகங்களை நடத்துபவர்களைக் கலந்து ஆலோசிக்காமல் அவசரமாக நிறைவேற்றி விட்டார்கள். ஜி.எஸ்.ரி. வரியால் விலைவாசி உயரும் ஆபத்து உள்ளது. இதனால் மக்கள் பாதிக்கப்படப் போகிறார்கள். இதனை இந்தக் குதிரை பேர அ.தி.மு.க. அரசு எதிர்க்காமல் உள்ளது.

தமிழகத்தில் நடைபெறுவதை நாங்கள் ஆட்சியாகக் கருதவில்லை, காட்சிப் பொருளாகத்தான் கருதுகிறோம். ஜெயலலிதா மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டார். ஆனால், தற்போது நடைபெறும் ஆட்சி மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டது அல்ல.

தி.மு.க. ஆட்சியில் இல்லை என்றாலும் மக்கள் பிரச்சினைகளைக் கவனித்து வருகிறது. மக்களோடு சேர்ந்து போராடுகிறது. ஏரி, குளங்களை அரசு தான் தூர்வார வேண்டும். ஆனால், எதிர்க்கட்சியான தி.மு.க. அதைச் செய்து வருகிறது.

ஜெயலலிதா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த போது அவருக்கு என்ன சிகிச்சை அளிக்கப்பட்டது என்று தெரியவில்லை.

ஆனால், கருணாநிதி சிகிச்சை பெறும் புகைப்படங்களை நாம் முறையாக வெளியிட்டு வருகிறோம். அண்ணா, எம்.ஜி. ஆர். ஆகியோர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த போது அவர்களின் சிகிச்சை முறைகள் தொடர்பில் தினமும் மருத்துவ அறிக்கைகள் வெளியிடப்பட்டு வந்தன.

ஓ.பன்னீர்செல்வம் பதவி பறிக்கப்பட்ட பிறகுதான் ஜெயலலிதா இறப்புத் தொடர்பில் நீதி விசாரணை வேண்டும் என்று கூறுகிறார்.

ஆட்சியை நாங்கள் கவிழ்க்கத் தேவை இல்லை. அ.தி.மு.கவினரே ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். தானாகவே இந்த ஆட்சி கவிழும். -என்றார். (ச)

## குழந்தைக்கு ஜி.எஸ்.ரி. எனப் பெயர் சூட்டிய தம்பதி!



ஜெய்ப்பூர், ஜூலை 04

ஜி.எஸ்.ரி. வரி அமுல்படுத்தப்பட்ட சமயத்தில் ராஜஸ்தானில் பிறந்த குழந்தை ஒன்றுக்கு ஜி.எஸ்.ரி. எனப் பெற்றோர் பெயரிட்டுள்ளமை அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்தியா முழுவதும் ஒரே வரி என்பதை வலியுறுத்தும் வகையில் சமீபத்தில் மத்திய அரசு ஜி.எஸ்.ரி. வரியை அமுல்படுத்தியது.

இதற்காகப் புதுடில்லியில் உள்ள நாடாளுமன்ற வளாகத்தில் கடந்த 30 ஆம் திகதி நள்ளிரவு நடந்த சிறப்புக் கூட்டத்தில் பா.ஜ.க. அரசு ஜி.எஸ்.ரி. வரியை அறிமுகப்படுத்தியது.

இந்த நிலையில், ராஜஸ்தான் மாநிலம் பீவா பகுதியை சேர்ந்த பெண் ஒருவருக்கு அன்று நள்ளிரவு சரியாக 12.02 மணிக்கு குழந்தை பிறந்தது. இந்தநிலையில், பெற்றோர் அந்தக் குழந்தைக்கு ஜி.எஸ்.ரி. எனப் பெயரிட்டனர்.

குழந்தைக்கு ஜி.எஸ்.ரி. எனப் பெயர் வைத்தமையை அறிந்த ராஜஸ்தான் முதலமைச்சர் வசுந்தரா ராஜே, தனது 'டுவிட்டர்' பதிவில், 'ஜி.எஸ்.ரி. குழந்தைக்கு வாழ்த்துக்கள்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

### கேளிக்கை வரிக்கு எதிர்ப்பு:

## ஆயிரம் திரை அரங்குகள் மூடப்பட்டன தமிழகத்தில்!

சென்னை, ஜூலை 04

தமிழக அரசின் கேளிக்கை வரி விதிப்பைக் கண்டித்து மாநிலம் முழுவதும் உள்ள ஆயிரம் சினிமாத்திரையரங்குகள் மூடப்பட்டுள்ளன; அனைத்துக் காட்சிகளும் ரத்துச் செய்யப்பட்டன.

சினிமா ரிக்கெற்றுக்கு அதிகபட்சமாக 28 சதவீதம் பொருள் மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.ரி.) விதிக்கப்பட்டுள்ளது. இதனால், சினிமாக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், தமிழக அரசு உள்ளாட்சி அமைப்புகள் மூலம் சினிமா ரிக்கெற்றுக்கு 30 சதவீதம் கேளிக்கை வரி வசூலிப்பதற்குப் புதிய சட்டம் கொண்டு வந்துள்ளது. இந்தச் சட்டம் திரையுலகினர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

எனவே மேற்படி கேளிக்கை வரிச் சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்றும், இல்லாவிட்டால் 3 ஆம் திகதி நேற்று திங்கட்கிழமை முதல் திரையரங்குகளை மூடுவோம் என்றும் திரையரங்க உரிமையாளர்கள் அறிவித்தனர். இதனால், திரையுலகில் பரபரப்பு ஏற்பட்டது.

திரையரங்குகளை மூடினால் தயாரிப்பாளர்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே, போராட்டத்துக்கு ஆதரவு தர முடியாது என தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர் நடிகர் விஷால் அறிவித்தார்.

திரையரங்கு உரிமையாளர்கள் வேலைநிறுத்தப் போராட்ட அறிவிப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இருப்பினும் திட்டமிட்டபடி வேலை நிறுத்தம் நடைபெறும் என்று திரையரங்கு உரிமையாளர்களின் அவசர கூட்டத்தைத் தொடர்ந்து அபிராமி ராமநாதன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த நிலையில், திரையரங்க உரிமையாளர்கள் சங்கத்தினர் அறிவித்தபடி தமிழகம் முழுவதும் நேற்றுத் திரையரங்குகள் மூடப்பட்டிருந்தன. (ச)

### சொத்துக் குவிப்பு வழக்கு:

## சசிகலா தரப்பின் மறு சீராய்வு மனு நாளைமறுதினம் விசாரணைக்கு?



சொத்துக் குவிப்பு வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்2து வரும் சசிகலா, இளவரசி மற்றும் சுதாகரன் ஆகியோரது மறு சீராய்வு மனு நாளைமறுதினம் வியாழக்கிழமை விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்தனர் எனக் குற்றம் சாட்டப்பட்டு இவர்கள் மூவருக்கும் 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. தற்போது இவர்கள் பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

இவர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மறு சீராய்வு மனு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த நிலையில், எதிர்வரும் வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த மறு சீராய்வு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

''ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் எங்களை தண்டிப்பதற்கு நாங்கள் ஒன்றும் அரச ஊழியர் அல்லர். அந்தச் சட்டம் அரச ஊழியர்களுக்கு மட்டுமே பொருந்தும் எங்களுக்குப் பொருந்தாது. எனவே, இந்த வழக்கில் எங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள 4 ஆண்டுகள் சிறைத் தண்டனையை ரத்து செய்து எங்களை விடுவிக்க வேண்டும்.''- எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

### குல்பூஷன் ஜாதவ் விவகாரம்:

## இந்தியாவின் கோரிக்கையை மீண்டும் நிராகரித்தது பாக்.!

குல்பூஷன் ஜாதவ் விவகாரத்தில் இந்தியாவின் கோரிக்கையை பாகிஸ்தான் மீண்டும் நிராகரித்துள்ளது.

இந்தியாவைச் சேர்ந்த முன்னாள் கடற்படை அதிகாரி குல்பூஷன் ஜாதவ், பாகிஸ்தானில் உளவு பார்த்தார் எனக்கூறி அவருக்கு அந்த நாட்டு இராணுவ நீதிமன்றம் மரண தண்டனை விதித்த. பாகிஸ்தானின் இந்தச் செயலுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்தது.

அவருக்கு தூதரக உதவிகள் தொடர்ந்தும் மறுக்கப்பட்ட நிலையில், தண்டனையை எதிர்த்து நெதர்லாந்தில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் இந்தியா மேல்முறையீடு செய்தது. இந்த வழக்கு சர்வதேச நீதிமன்றத்தில் 10 நீதிபதிகள் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்போது வழக்கின் தீர்ப்பு வரும் வரை குல்பூஷன் ஜாதவின் மரண தண்டனையை நிறுத்தி வைக்கும்படி நீதிபதிகள் உத்தரவிட்டனர். இந்த உத்தரவை மறுவிசாரணை செய்ய வேண்டும் என பாகிஸ்தான் மனுத் தாக்கல் செய்திருந்தது. இந்த நிலையில், தனக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை எதிர்த்து ஜாதவ் மேல்முறையீடு செய்திருந்தார். இதைப் பாகிஸ்தான் இராணுவ நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதை அடுத்து, குல்பூஷன் ஜாதவ் பாகிஸ்தான் ஜனாதிபதி மற்றும் அந்த நாட்டு இராணுவத் தளபதி ஆகியோருக்கு கருணை மனு அனுப்பினார். இந்த நிலையில், இந்திய தரப்பில் ஜாதவுக்கு தூதரக ரீதியிலான உதவிகளைச் செய்ய அனுமதிக்குமாறு மீண்டும் வலியுறுத்தப்பட்டது. ஆனால் பாகிஸ்தான் அதற்கு மீண்டும் மறுப்புத் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் நபீஸ் சகாரியா வெளியிட்ட அறிக்கையில்-

''ஜாதவின் வழக்கை கடலில் எல்லைதாண்டி பிடிபடும் மீனவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருடன் இந்தியா ஒப்பிட்டு பரிகாசம் தேட முயற்சிக்கிறது. ஜாதவைப் பொறுத்தமட்டில் பாகிஸ்தானில் உளவு மற்றும் தீவிரவாதச் செயல்களை அரங்கேற்ற இந்திய உளவுத் துறையால் அனுப்பி வைக்கப்பட்டவர். 2 நாடுகளுக்கும் இடையிலான தூதரக ஒப்பந்தத்தின்படி பாகிஸ்தான் செயற்படுகிறது'' - என்றுள்ளது. (ச)

# மீட்புப் பணியில் ஈடுபட்ட கடற்படை ஹெலி மலையில் மோதி வெடித்துச் சிதறியது!

ஜகர்த்தா, ஜூலை 04

இந்தோனேஷியா மத்திய ஜாவா மாகாணத்தின் தமாக்கங்க் மாவட்டத்தில் ஹெலிக்கொப்டர் மலையில் மோதி விபத்துக்குள்ளானதில், 8 பேர் உயிரிழந்தனர்.






இந்தோனேஷியாவில் 8 பேர் சாவு

தமாக்கங்க் மாவட்டத்தில் உள்ள எரிமலை ஒன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு திடீரென வெடித்துச் சிதறியது. அதில் 10 பேர் காயம் அடைந்தனர்.

எனவே, எரிமலைவெடித்த பகுதியில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் கடற்படை ஹெலிக்கொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டன.

இந்த நிலையில், மேற்படி ஹெலிக்கொப்டர் காயமடைந்த 4 பேரை ஏற்றிக் கொண்டு டியங் பிளட்டியூ பகுதிக்குப் புறப்பட்டுச் சென்றது.

அந்தப் பகுதியைச் சென்றடைய சுமார் 3 நிமிடத்துக்கு முன்பு அங்கிருந்த புடால் மலையில் மோதியது. இதனால், வெடித்துச் சிதறிய ஹெலிக் கொப்டர் தீப்பந்து போன்று மலையில் விழுந்து நொருங்கியது.

இந்த விபத்தில் ஹெலிக் கொப்டரில் பயணம் செய்த 8 பேரும் அதேஇடத்தில் பலியாகினர். அவர்களில் 4 பேர் கடற்படை அதிகாரிகள். 4 பேர் மீட்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## பிரான்ஸில் மசூதி அருகில் துப்பாக்கிச் சூடு: 8 பேர் காயம்!

பிரான்ஸின் அவின்யோனனும் பகுதியில் உள்ள முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்றுக்கு அருகில் நேற்றுத் திங்கட்கிழமை நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில், 8 பேர் படுகாயம் அடைந்தனர்.

மசூதியில் தொழுகை முடித்துப் பலர் வெளியே வந்து கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த 2 மர்ம நபர்கள் தாங்கள் வைத்திருந்த துப்பாக்கிகளால் சரமாரியாகச் சுட்டனர். இது ஒரு பயங்கரவாதத் தாக்குதல் அல்ல. தனிப்பட்ட கோபத்தின் காரணமாக முன்னெடுக்கப்பட்ட தாக்குதல் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)



## ஹிட்லரின் ஓவியங்கள் பிரித்தானியாவில் ஏலம்!

ஜேர்மன் நாட்டின் முன்னாள் சர்வாதிகாரி ஹிட்லர் வரைந்த 5 ஓவியங்கள் பிரித்தானியாவில் ஏலம் விடப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஹிட்லரின் 5 ஓவியங்கள் பிரித்தானியாவைச் சேர்ந்த முல்லாக்ஸ் ஏல நிறுவனத்தின் மூலம் நாளைமறுதினம் வியாழக்கிழமை விற்பனைக்கு வர உள்ளன.

இதில் 4 ஓவியங்களில் ஏ.ஹிட்லர் என்ற கையெழுத்து இடம்பெற்றுள்ளது. மற்றொன்றில் கையெழுத்து இல்லாவிட்டாலும், அவருடையதுதான் என நம்பப்படுகிறது. இவற்றில் 2 ஓவியங்கள் 1900 ஆம் ஆண்டில் வரையப்பட்டவை ஆகும்.

ஒவ்வொரு ஓவியமும் 4.25 லட்சம் ரூபா முதல் 6 லட்சம் ரூபாவரை விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஹிட்லர் என்றால் அவர் ஒரு சர்வாதிகாரி என்ற நினைவுதான் வரும். ஆனால், அவர் சிறந்த ஓவியர் என்பது பலருக்கும் தெரியாத தகவல். அவர் தனது வாழ்நாளில் 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் வரையான ஓவியங்களை வரைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

### இராஜதந்திர உறவுக்கான தடையை நீக்குவதற்கு

# கட்டாருக்கான கால அவகாசம் மேலும் 48 மணி நேரம் நீடிப்பு!

ரியாத், ஜூலை 04

கட்டாருடனான இராஜதந்திர உறவுக்கான தடையை நீக்குவதற்காக சவுதி அரேபியா உள்ளிட்ட அரபு நாடுகள், அந்த நாட்டுக்கு விதித்துள்ள நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதற்கான கால அவகாசத்தை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமையில் இருந்து மேலும் 48 மணித்தியாலமாக நீடித்துள்ளன.

தீவிரவாதத்துக்கு கட்டார் ஆதரவு அளிக்கிறது எனக் குற்றஞ்சாட்டி அந்த நாட்டுடனான இராஜதந்திர உறவை சவுதி அரேபியா, எமிரேட்ஸ், பஹ்ரைன், எகிப்து ஆகிய நாடுகள் கடந்த ஜூன் மாதம் 5 ஆம் திகதி முதல் துண்டித்துக் கொண்டன.

தீவிரவாதிகளுக்கு மறைமுகமாகப் பண உதவி செய்கிறது என்றும், தங்களது எதிரி நாடான ஈரானுடன் இராஜதந்திர உறவு வைத்திருக்கிறது எனக் கூறியுமே இந்தத் தடை விதிக்கப்பட்டது. அதைக் கட்டார் திட்டவட்டமாக மறுத்தது.

அதனைத் தொடர்ந்து, தடை காரணமாக கட்டாரில் இருந்து மேற்கண்ட நாடுகள் தங்களின் தூதுவர்களை திரும்பப் பெற்றன. மேலும், கட்டார் விமானங்கள் தங்கள் நாட்டின் வான் எல்லையில் பறப்பதற்குத் தடை விதித்தன. கப்பல் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது. இதனால் கட்டார் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் குவைத் மன்னர் ஈடுபட்டுள்ளார். சவுதி அரேபியாவின் நட்பு நாடுகள் மற்றும் கட்டாருக்கு இடையே சமரசம் செய்யும் நடவடிக்கையை அவர் மேற்கொண்டார்.

**சவுதி அரேபியா உள்ளிட்ட நாடுகள் அறிவிப்பு**

இதைத் தொடர்ந்து சவுதி அரேபியாவும், அதன் நட்பு நாடுகளும் கட்டாருக்கு கடந்த 22 ஆம் திகதி 13 கோரிக்கைகள் விடுத்தன. அதில் எகிப்தில் சகோதரத்துவக் கட்சிக்கு வழங்கும் ஆதரவைக் கட்டார் நிறுத்த வேண்டும். அல்-ஜசீரா தொலைக்காட்சியை மூடவேண்டும். ஈரானுடனான இராஜதந்திர உறவைக் குறைக்க வேண்டும். கட்டாரில் இயங்கும் துருக்கி இராணுவ முகாமை மூடவேண்டும் என்பன போன்ற முக்கிய கோரிக்கைகள் ஆகும். இவற்றை ஏற்றுக்கொள்வதற்குக் கட்டாருக்கு 10 நாள் காலக்கெடு விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமையில் கால அவகாசம் முடிந்துள்ளது. எனவே, அதை நீடிக்கும்படி குவைத் அரசு சவுதி அரேபியாவிடம் வலியுறுத்தி இருந்தது. அதைப் பரிசீலித்த சவுதி அரேபியா மற்றும் நட்பு நாடுகள் கட்டாருக்கு விதிக்கப்பட்ட கெடுவை மேலும் 48 மணித்தியாலங்களாக நீடித்துள்ளது.

இதேவேளை, கட்டாரில் அமெரிக்காவின் மிகப்பெரிய விமானப்படைத் தளம் உள்ளது. எனவே, சவுதி அரேபியாவுக்கும் கட்டாருக்கும் இடையே சமரசத்தை ஏற்படுத்த அமெரிக்கா தீவிரமாக முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் அமெரிக்க தலைநகர் வொஷிங்டனில் இரு தரப்பு மூத்த அமைச்சர்கள், மூத்த அதிகாரிகள் முகாமிட்டு பேச்சு நடத்தி வருகின்றனர். ஆனால் இதில் இதுவரை எந்த சுமுகமான முடிவும் எட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# விண்ணில் பாய்ந்த சிறிது நேரத்தில் வெடித்துச் சிதறியது சீன ரொக்கெட்!

பீஜிங், ஜூலை 04

ஷிஜியான்-18 என்னும் செயற்கைகோளுடன் "லோங் மார்ச்-5 வை 2" என்ற நவீன தொழில் நுட்பம் கொண்ட சீன ரொக்கெட் விண்ணில் பாய்ந்த சிறிது நேரத்திலேயே வெடித்துச் சிதறியது.

அதிக எடை கொண்ட அதி நவீன ரொக்கெட்டுகளை விண்ணில் செலுத்துவதற்கான சோதனைகளைச் சீனா அவ்வப்போது நடத்தி வருகிறது.

அந்த நாட்டின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை ஷிஜியான்-18 என்னும் செயற்கைக் கோளுடன் "லோங் மார்ச்-5 வை 2" என்ற நவீன தொழில் நுட்பம் கொண்ட ரொக்கெட்டை ஹைனன் மாகாணத்தில் உள்ள வென்சாங் என்னும் இடத்தில் இருந்து விண்ணில் செலுத்தியது. 7.5 தொன் நிறை கொண்ட இந்த ரொக்கெட் விண்ணில் பாய்ந்த சிறிது நேரத்திலேயே வெடித்துச் சிதறியது.

ரொக்கெட் வெடித்ததற்கு அதன் இயல்பு நிலையில் மாற்றம் ஏற்பட்டதுதான் காரணம் என்று சீன விண்வெளி ஆராய்ச்சி விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இந்த ரொக்கெட் 25 தொன் நிறையைச் சுமந்து செல்லக் கூடியதாகும். ஏற்கனவே இதுபோன்ற ரொக்கெட் சோதனையைக் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் சீனா நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தொடர்ந்து மூன்றாவது தோல்வியைத் தழுவியது இலங்கை மகளிர் அணி!



டான்டன், ஜூலை 04

மகளிர் உலகக் கிண்ணத்திற்கான குழு நிலைப்போட்டிகள் தற்போது இங்கிலாந்தில் நடைபெற்று வருகின்றன.

இதில் நேற்று முன்தினம் நிறைவடைந்த இலங்கை மகளிர் அணி மற்றும் இங்கிலாந்து மகளிர் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில், இலங்கை மகளிர் அணியை 7 விக்கெட்டுகளால் வீழ்த்தி இங்கிலாந்து தொடரில் முன்னேறியுள்ளது.

டான்டன் கவுண்டி மைதானத்தில் ஆரம்பமாகியிருந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித் தலைவி இனோகா ரணவீர முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

நாணயச் சுழற்சி முடிவுகளிற்கு அமைவாக மைதானம் விரைந்த இலங்கை மகளிர் அணி, மெதுவான ஆரம்பம் ஒன்றை வெளிக்காட்டியிருந்தது.

இலங்கை மகளிர் அணியின் முதல் விக்கெட்டாக, இங்கிலாந்தின் வலது கை வேகப் பந்துவீச்சாளரான நட்டாலி ஸ்க்கீவர் ஆரம்ப துடுப்பாட்ட வீராங்கனை நிப்புனி ஹன்சிக்காவை 17 ஓட்டங்களுடன் ஓய்வறைக்கு அனுப்பியிருந்தார்.

இதனையடுத்து, இலங்கை சார்பாக துடுப்பாட வந்த சமரி அத்த பத்து வெறும் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். இதனால், அவுஸ்திரேலிய மகளிர் அணியுடனான போட்டி போன்று இந்தப் போட்டியிலும் சாதிப்பார் என எதிர்பார்க்கப்பட்டிருந்த சமரி அனைவருக்கும் ஏமாற்றம் அளித்திருந்தார்.

எனினும், மற்றைய ஆரம்ப துடுப்பாட்ட வீராங்கனை ஹசினி பெரேரா மற்றும் வலது கை துடுப்பாட்ட வீராங்கனை சுஷிகலா சிறிவர்தன ஆகியோர் சற்று நிதானமாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர்.

இதில், ஹசினி பெரேரா 63 பந்துகளில் 6 பவுண்டரிகள் அடங்கலாக 46 ஓட்டங்களையும் சஷிகலா சிறிவர்தன 47 பந்துகளில் 33 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

தொடர்ந்து, மத்திய வரிசையில் மந்த கதியில் துடுப்பாடிய இலங்கை மகளிர் அணி வீராங்கனைகளில் அமா காஞ்சனாவைத் தவிர யாரும், முப்பது ஓட்டங்களைக் கூட தாண்டியிருக்கவில்லை.

இதனால், முடிவில் இலங்கை மகளிர் அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 204 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

இறுதி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் நின்று துடுப்பாடியிருந்த பின் வரிசை வீராங்கனையான அமா காஞ்சனா 39 பந்துகளில் ஒரு சிக்ஸர் மற்றும் இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 34 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இங்கிலாந்து மகளிர் அணியின் பந்து வீச்சில், வலதுகை வேகப் பந்து வீச்சாளர் லோரா மார்ஷ் இலங்கையின் 4 விக்கெட்டுகளை 45 ஓட்டங்களுக்கு பதம் பார்த்திருந்தமையோடு, நட்டாலி ஸ்க்கீவர் இரண்டு விக்கெட்டுகளைக் கைப் பற்றியிருந்தார்.

இலங்கை மகளிர் அணியின் முதல் இன்னிங்ஸினை அடுத்து, வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 205 ஓட்டங்களை 50 ஓவர்களில் பெறுவதற்கு பதிலுக்குத் துடுப்பாடிய இங்கிலாந்து மகளிர் அணி, ஆரம்பத்தில் இரண்டு விக்கெட்டுகளை அமா காஞ்சனாவின் வேகத்திற்கு பறிகொடுத்திருந்தது.

எனினும், மூன்றாம் விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த இங்கிலாந்து மகளிர் அணியின் தலைவி ஹீத்தர் நைட் மற்றும் சாரா டெய்லர் ஆகியோர் மிகவும் சாதுரியமான அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி 148 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தனர்.

இதனால், 30.2 ஓவர்களில் இங்கிலாந்து மகளிர் அணி 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 206 ஓட்டங்களுடன் வெற்றி இலக்கை அடைந்தது.

இதில், இங்கிலாந்து மகளிர் அணியின் அணித் தலைவி ஹீத்தர் நைட் 76 பந்துகளில் 10 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் அடங்கலாக 82 ஓட்டங்களையும், ஆட்டமிழக்காமல் நின்றிருந்த சாரா டெய்லர் 67 பந்துகளில் 11 பவுண்டரிகள் அடங்கலாக 74 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

இலங்கை மகளிர் அணியின் பந்து வீச்சில், அமா காஞ்சனா 38 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், சமரி அத்தபத்து ஒரு விக்கெட்டை கைப் பற்றியிருந்தனர்.

இம்முறை மகளிர் உலகக் கிண்ணத்தில், இலங்கைக்கு இது மூன்றாவது தொடர் தோல்வியாகும்.

இலங்கை அணி இந்தத் தொடரில் அடுத்ததாக இந்திய மகளிர் அணியை நாளை எதிர்கொள்கின்றது.

# 4 ஆவது ஒருநாள் கிரிக்கெட்: மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி!




ஆன்டிகுவா, ஜூலை 04

ஆன்டிகுவா நகரில் நடைபெற்ற நான்காவது ஒருநாள் போட்டியில் இந்திய அணியை 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வீழ்த்தியது.

இந்தியா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான நான்காவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஆன்டிகுவாவில் நேற்று முன்தினம் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் ஹோல்டர் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

இந்திய அணியில் புவனேஸ்வர் குமார், யுவ ராஜ்சிங் மற்றும் அஸ்வின் நீக்கப்பட்டு மொகமது ஷமி, தினேஷ் கார்த்திக் மற்றும் ஜடேஜா ஆகியோர் சேர்க்கப்பட்டனர்.

துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்த மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு துவக்க வீரர்களான எவின் லீவிஸ் மற்றும் கைல் ஹோம் தலா 35 ஓட்டங்களைக் குவித்தனர். நிதான ஆரம்பத்தை அளித்த ஜோடியை பாண்டியா ஓய்வறைக்கு அனுப்பினார்.

ஆரம்ப ஜோடியை தொடர்ந்து களமிறங்கிய ஷை ஹோம் 25 ஓட்டங்களுடனும், ராஸ்டன் சேஸ் 24 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். தொடக்க ஜோடி நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய நிலையில், மற்ற வீரர்களும் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 189 ஓட்டங்களை மேற்கிந்தியத் தீவுகள் அணி குவித்தது.

இந்திய அணி சார்பில் ஹார்திக் பாண்டியா மற்றும் உமேஷ் யாதவ் தலா மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினர். குல்தீப் யாதவ் இரண்டு விக்கெட்டுகளை கைப்பற்றினார். 190 என்ற வெற்றி சுலப இலக்கை துரத்திய இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது.

ஆரம்ப வீரராக களமிறங்கிய ஷிகர் தவான் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவரை அடுத்து களமிறங்கிய தலைவர் விராட் கோஹ்லி 3 ஓட்டங்களிலும், தினேஷ் கார்த்திக் 2 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். ஒரு பக்கம் விக்கெட்டுகள் சரிந்த நிலையிலும் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய அஜிங்கியா ரகானே பொறுப்புடன் விளையாடினார். 91 பந்துகளில் 60 ஓட்டங்களைக் குவித்த ரகானே, பிஷோ பந்தில் ஆட்டமிழந்தார்.

பின் களமிறங்கிய டோனி நிதானமாக விளையாடி 54 ஓட்டங்களைக் குவித்தார்.

எனினும், ஏனைய வீரர்கள் ஓட்டங்களைக் குவிக்க தவறியமையால் இந்திய அணி 49.4 ஓவர்களில் 178 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. மேற்கிந்தியத் தீவுகள் அணி 11 ஓட்டங்களால் வெற்றியடைந்தது.

ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இந்திய அணி 2-1 என்ற புள்ளிகளுடன் முன்னிலை வகிக்கிறது. இரு அணிகள் மோதும் தொடரின் இறுதிப் போட்டி நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

இதேவேளை, முக்கியமான நேரத்தில் விக்கெட்டுகளை இழந்தமையால் இந்தத் தோல்வியை அடைந்தோம் என இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எங்களது பந்துவீச்சு சிறப்பாக இருந்தது. இதனால் மேற்கிந்தியத் தீவுகளை 189 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தி விட்டோம்.

ஆனால், துடுப்பாட்டம் தான் சரியாக அமையவில்லை. மிகவும் இக்கட்டான நேரத்தில் முக்கியமான விக்கெட்டுகளை இழந்துவிட்டோம்.

மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சும், களத்தடுப்பும் சிறப்பாக இருந்தது. இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு நெருக்கடி கொடுத்தனர். பாராட்டு எல்லாம் அவர்களைத் தான் சாரும். அடுத்த போட்டியில் புத்துணர்வுடன் விளையாடுவோம் என்று தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றி தொடர்பில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் தெரிவிக்கையில்-

இந்திய அணியை வெல்ல முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருந்தது. எங்களது பந்து வீச்சு நேர்த்தியாக இருந்தது. களத் தடுப்பும் சிறப்பாக அமைந்தது என்று தெரிவித்துள்ளார்.

# சிவத்தமிழ் செல்வியின் குருபூசை தினம் இன்று!



தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் முன்னாள் தலைவர் துர்க்கா துரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் ஒன்பதாவது குருபூசைத் தினம் இன்றாகும்.

தேவஸ்தானத்தின் தற்போதைய தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில்குருபூசைதினநிகழ்வுகள் நடைபெற உள்ளன.

இன்று காலை 9 மணிக்கு ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று 9.20 மணிக்கு அன்னையின் திருவுருவச் சிலையில் வழிபாடு இடம்பெற்று, 9.30 மணிக்குதிருமுறை மடத்தில் துர்க்காதேவி மகளிர் இல்ல மாணவிகளின் திருமுறைப் பாராயணம் இடம்பெறும்.

காலை 9.40 மணிக்கு சிறப்பு நிகழ்வுகள் துர்க்கா தேவி தேவஸ்தான அன்ன பூரணி மண்டபத்தில் நடைபெறும்.

வரவேற்புரையை தேவஸ்தான உப பொருளாளர் சு.ஏழூர் நாகமும் பண்ணிசையை வலிகாமம்கல்விவலயஇசைப் பாறிய உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி விமலாதேவி நாகேஸ்வரனும், பிரார்த்தனை உரைகளை தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீவா.அகிலேஸ்வரக்குருக்கள், மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேயர் ஆலய ஆதீனகர்த்தா சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள், நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள், யாழ்.சின்மய மிஷன் முதல்வர் ஜாக்கிரத சைத்தன்யா ஆகியோர் வழங்குவர்.

வாழ்த்துரையை யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் க.தேவராஜா வழங்குவார்.

தலைமை உரையைத் தொடர்ந்து மூத்த சிவாச்சாரியார்களான சிவஸ்ரீ சோமாஸ்கந்த ஐயர், திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலய அறங்காவலர் சிவஸ்ரீ இ.ரவிச் சந்திரக் குருக்கள், இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய பிரதமகுருசிவஸ்ரீவைத்தீஸ்வரக்குருக்கள் சோமாஸ்கந்தக் குருக்கள் ஆகியோர் கௌரவிக்கப்பட உள்ளனர்.

பகல் 11 மணிக்கு 12ஆம் திருமுறை திருத்தொண்டர் புராணம் 3 ஆம்பாகம் வெளியீடும் இடம்பெறும்.

வெளியீட்டுரையை ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்க விரிவுரையாளர் பண்டிதர் ந.ந.கடம்பேஸ்வரன் நிகழ்த்துவார்.

முதற்பிரதியை தேவஸ்தான உப தலைவர் லயன் ச.ஆறுமுகநாதன் பெறுவார்.

நன்றியுரையை தேவஸ்தான நிர்வாகச் செயலாளர் நா.தவநாதன் வழங்குவார். நண்பகல் 12 மணிக்கு அன்னதானம் நடைபெறும்.

# சைவப் பெண்களுக்கு பெருமை தந்த அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி!

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்

ஈழத்திருநாடு செய்த தவப்பேற்றினால் உதித்தவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி என்றால் மிகையாகாது. 1925ஆம்ஆண்டுஜனவரி மாதம் 07ஆம் திகதி பிறந்து 2008ஆம் ஆண்டுஜூன்மாதம் 15ஆம்திகதி மண்ணைவிட்டு நீங்கிய தாயின் பெருமை போற்றுதலுக்குரியது.

''நிறைமொழி மாந்தர் பெருமைநிலத்துமுறை மொழி காட்டிவிடும்'' என்ற வள்ளுவரின் கூற்றுக்கமைய பயன் நிறைந்த அறிவுரை களையும், நற்செயல்களையும் செய்து அழியா நிலையைபெற்ற சான்றோராக அம்மையார் விளங்குகின்றார். தன் வாழ்வைத் தவப்பொழுதாகக் கழித்து பலரும் வாழப் பணி செய்தவர். தெல்லிப்பழைதுர்க்கைஅம்மன்ஆலயத்திற்கு அம்மையார் செய்த தொண்டுப் பணிகள் வார்த்தைகளால் சொல்லி விட முடியாதவை. ஆலயம் என்பது இறைவனை வழிபாடு செய்யும் இடம் மட்டுமன்றி, ஆத்மாக்களின் துன்பத்தைப் போக்குவதற்கு ஆறுதல் வழங்கும் நிறுவனமாகவும்விளங்கவேண்டும் எனும் தன் கருத்தினால் உலகை வியக்க வைத்தவர். தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தை சமூக நலன் காக்கும் நிலையமாக செயற்படுத்தியவர். ஏழைப்பங்காளியாக இறுதிவரை வாழ்ந்தவர்.

சொல்லாலும், செயலாலும் அறம் காத்த அம்மையாரின் வாழ்வுதனித்துவமானது. பெண்கள் அஞ்சி வெட்கப்பட்டு ஒதுங்கி இருந்த காலத்தில், தனது ஆளுமையால் சமூகத்தை நோக்கி வெளிப்பட்டவர். சமய பிரசங்க மரபு ஆண்களால் மட்டுமன்றிப் பெண்களாலும் முடியும் என்ற பெருமையை நிலை நாட்டியவர். தலைசிறந்த தலைமைத்துவத்திற்கு இன்றும் தக்க சான்றாக அம்மையாரைக் கற்றோர் கருதுகிறார்கள்.

போர்ச்சூழலில் அல்லற்படும் மக்களோடு தானும் நின்று அல்லல்களைச்சந்தித்து ஆதர வற்றவர்களுக்கு வாழ்வு கொடுத்து இம்மண்ணில் நிலைத்து நின்றவர் அம்மையார். பல சோதனைகள் வேதனைகள் அசாதாரண சூழ்நிலையில் ஏற்பட்ட போதெல்லாம் எவர்க்கும் அஞ்சாது இறை துணையே எமக்குதுணை எனக் கூறி இரவும் பகலும் சேவை செய்தார்.

ஆத்மீக அன்னையின் ஆற்றுப்படுத்தலில் நாம் வளர்ந்தோம் என நினைக்கின்ற போது அது நமக்கு கிடைத்த பாக்கியம் என வணங்குவோமாக. அம்மையார் தொடக்கிய ஒவ்வொரு பணியும் உன்னத வளர்ச்சி கண்டுள்ளது.

அம்மையாரின்ஒன்பதாவது குருபூசைநாளாகிய இன்று அன்னையை நீள நினைந்து பிரார்த்திப்போமாக.

# லக்ஷன் சந்தகனின் மாயச் சுழலின் பின்னணி!



காலி, ஜூலை 04

போட்டியின் மத்திய ஓவர்களில் விக்கெட்டுக்களை சாய்ப்பதில் தடுமாற்றத்தைக் காண்பித்திருந்ததே இலங்கை அணியின் அண்மைக்கால வீழ்ச்சிகளுக்கு காரணமாக இருந்தது.

எனினும், ஸிம்பாப்வே அணியுடனான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் மத்திய வரிசை ஓவர்களில் முக்கிய பல விக்கெட்டுக் களை சாய்த்திருந்த சுழல் பந்து வீச்சாளரான லக்ஷன் சந்தகன் சர்வதேச போட்டிகளில் இலங்கை அணிக்கான தனது பெறுமதியை உணர்த்தியிருந்தார்.

இந்தப் போட்டி மூலம், ஒரு நாள் போட்டிகளில் சிறப்பான பந்து வீச்சை வெளிப்படுத்தியிருந்த சந்தகன், 10 ஓவர்களை வீசி 51 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை சாய்த்திருந்தார். இவரின் சிறப்பாட்டம் மூலம் இலங்கை, ஸிம்பாப்வே அணியுடனான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் வெற்றி பெற்று தொடரையும் சமப்படுத்திக் கொண்டது.

இந்தப்போட்டியின்பின்னர் சந்தகன் கருத்துத் தெரிவிக்கையில்-

கிட்டத்தட்ட இரண்டு அல்லது மூன்று மாதங்களின் பின்னர், ஒரு நாள் போட்டியொன்றில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன். நீண்ட இடைவெளியின் பின்னர் போட்டியொன்றில் விளையாடும் போது, உங்களுக்கு உங்கள் மீதான நம்பிக்கை மிகவும் அவசியம். எனக்கு, என்னைச் சுற்றியிருந்த அனைவரும் நம்பிக்கையூட்டி என்னை வலுப்படுத்தியிருந்தனர்.

நாங்கள் துடுப்பாட்ட வீரர்களுக்கு எதிரான சில திட்டங்களுடன் போட்டியில் களமிறங்கினோம். எமது திட்டங்கள் நாங்கள் எதிர்பார்த்ததை விட, மிகவும் சிறப்பாகவே எமக்கு உதவியிருந்தது. நாங்கள் களத்தடுப்பில், சில மாற்றங்களை மேற் கொண்டிருந்ததோடு, காற்றின் உதவியுடன் பந்துகளை மெதுவாக வீசியிருந்தோம்.

இன்னும், முதலாவது ஒரு நாள் போட்டிக்குப் பின்னர் நாங்கள் கலந்துபேசி இருந்த சில உத்திகளையும் நடைமுறைப்படுத்தியிருந்தோம் என்று தெரிவித்துள்ளார்.

சந்தகன் சம்பியன்ஸ் கிண்ணத்திற்கான இலங்கை அணியில் இணைக்கப்பட்டிருந்தும், அவருக்கு அந்தத் தொடரின் போட்டிகள் எதிலும் விளையாட வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இதற்கு, இலங்கை அணியின் முகாமைத்துவமும், நிர்வாகமுமே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால், சம்பியன்ஸ் கிண்ணத்தில் இலங்கை அணியின் துருப்புச் சீட்டுக்களில் ஒருவராக செயற்படுவார் என எதிர்பார்க்கப் பட்டிருந்த அவர் பின்வரிசையில் இருந்து இலங்கை அணியின் போட்டிகளைப் பார்ப்பவர்களில் ஒருவராகக் காணப்பட்டிருந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை அணிக்கு ஸிம்பாப்வே அணியுடன் ஏற்பட்ட அவமானத் தோல்வியை அடுத்து சுழல் வீரர்களான அமில அபொன் சோ மற்றும் அகில தனன் ஜய ஆகியோர் முதல் பதினொருவர் அணியில் இருந்து நீக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்குப் பதிலாக இலங்கை அணியின் தேர்வாளர்கள் மட்டுப் படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட வகைப் போட்டியில் இலங்கை அணியின் பிரதான சுழல் வீரர்களில் ஒருவராக மாறுவதற்கு லக்ஷன் சந்தகனுக்கு வாய்ப்பு ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்தனர்.

இது குறித்து சந்தகன் கருத்துத் தெரிவிக்கையில்-

நான் சுகவீனமுற்றிருந்த காரணத்தினால், எனக்கு பயிற்சி ஆட்டங்களில் கூட விளையாட வாய்ப்புகள் கிடைத்திருக்கவில்லை. அத்தோடு, உடல் நிலை சரியில்லாத காரணத்திற்காக நான் வீட்டிற்கும் அனுப்பப்பட்டிருந்தேன். ஒவ்வொரு போட்டியின் போதும், எனக்கு புதிய வாய்ப்பொன்று கிடைக் கின்றது. எனவே, நான் அந்த வாய்ப்புக்களைசரிவரஉபயோகப்படுத்தி அதிக விக்கெட்டுக்களை அணிக்காக பெற முயற்சி செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார். ஸிம்பாப்வே அணியுடனான போட்டியின் போது, இலங்கை அணியின் முகாமையாளர் அசங்க குருசிங்க மைதானத்திற்குள் நுழைந்திருந்ததோடு, சந்தகனிற்கு ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை வழங்கியிருந்ததை அவதானிக்க முடிந்திருந்தது.

## 3 மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அறிவித்தலைத் தேர்தல்கள் ஆணையகம் விரைவில் வெளியிடும் என்றும் –

அதிகாரிகளை மேற்கோள் காட்டி கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடமத்திய மாகாண சபை, சப்ரகமுவ மாகாண சபை, கிழக்குமாகாணசபைஆகியவற்றின்பதவிக்காலம்ஒக்ரோபர்முதலாம் திகதி முடிவடைகின் றது.

அடுத்தநாள்புதியதேர்தலுக்கானவேட்புமனுவைக் கோருவதற்குத் தேர்தல்கள் ஆணையகம் தீர்மானித்திருப்பதாக அறிய வருகின்றது. (உ)

## தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாயகன் தலைமையில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி உள்ளிட்ட இராணுவ உயர் அதிகாரிகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், மாவை சேனாதிராசா மற்றும் பிரதேச செயலர்கள், அரச உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது மாவட்டத்தின் பல இடங்களிலும் படையினர் ஆக்கிரமிப்பில் இருக்கின்ற நிலங்களை அடையாளப்படுத்துவது மற்றும் அவற்றை விடுவித்துப் படையினர் அரச காணிகளுக்குச் செல்வது உட்பட பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

இந்நிலையில் இக் கலந்துரையாடலின் முடிவில் சந்திப்புக் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலையே மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

வடக்கில் படையினர் ஆக்கிரமிப்பில் இருக்கின்ற நிலங்களை விடுவிப்பது குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதிடன் பேச்சு நடத்தியிருந்தது. இதற்கமையப் பாதுகாப்புப் படையினருக்கும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில், யாழிலுள்ள காணிகளை விடுவிப்பது குறித்துப் படைத் தரப்புகள் மற்றும் அரச அதிகாரிகளுடன் இணைந்து யாழ். மாவட்டச் செயலகத்தில் இன்றையதினம் (நேற்று) ஆராய்ந்துள்ளோம். இதில் அடுத்த கட்ட முன்னேற்ற நடவடிக்கைகள் குறித்தே அதிக கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

குறிப்பாக அரச மற்றும் பொது மக்களது காணிகள் பலவும் படையினர் வசம் இருக்கின்றன. இந்நிலையில் தனியார் காணிகளிலிருந்து படையினர் வெளியேற வேண்டும் என்பதே எமது கோரிக்கையாக இருக்கின்றது.

அவ்வாறு தனியார் காணிகளில் இருந்து இராணுவம் வெளியேறி தமது முகாம்களை அமைப்பதற்கான இடங்களை பிரதேச செயலாளர்கள் அடையாளம் காட்டியுள்ளார்கள். அவ்வாறு படையினர் வெளியேறுகின்றபோது தான் அங்கு மக்களைக் குடியமர்த்த முடியும். இவ்வாறு பல விடங்கள் குறித்தும் பேசப்பட்டு நல்ல முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. – எனவும் சுமந்திரன் மேலும் தெரிவித்தார். (உ)



திருகோணமலையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்ட போராட்டம் நேற்று இடம்பெற்றது.

# வடக்கு அமைச்சர் அனந்தி சசிதரன் கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றார்



(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாண சபையின் மகளிர் விவகார மற்றும் சமூக சேவைகள், புனர்வாழ்வு, கூட்டுறவு அமைச்சராகப் பதவியேற்றதிருமதி அனந்திசசிதரன் தனது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றார்.

யாழ். ஏ-9 வீதியின் அரியாலைப் பகுதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் அவர் நேற்று மதியம் கடமைகளை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில், வட மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் அதிகாரிகள், அனந்தி சசிதரனின் ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, வடக்கு கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் ஆகியோர் வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் கூரே முன்னிலையில் கடந்த மாதம் 29 ஆம் திகதி பதவியேற்றிருந்தனர். கல்வி அமைச்சர் அன்றைய தினமே தமது கடமைகளைப் பொறுப்பேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தலைமையில் திருகோணமலையில் நேற்றுப் பெரும் போராட்டம்

திருகோணமலை, ஜூலை 04

முன்னாள்ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷ தலைமையில் திருகோணமலையில் மக்கள் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

சீனக்குடாவில் உள்ள எண்ணெய்க் குதங்களை இந்தியாவிற்கு விற்பனை செய்வதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாகவும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் போராட்டம் நடைபெறுவதாகவும்தெரிவிக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் அவரது மகன் நாமல் ராஜபக்ஷவும்கலந்துகொண்டார்.

மேலும் வாசுதேவ நாணயக்கார, தினேஸ் குணவர்தன, மஹிந்தானந்த அளுத் கமகே, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, ஜீ.எல்.பீரிஸ் மற்றும் டலஸ் அழகப்பெரும என கூட்டு எதிர்க் கட்சியின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ம)

## மீனவர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று மயிலிட்டித் துறைமுகம் விடுவிக்கப்பட்டமையை அடுத்து, இந்தப் படகுகள் மயிலிட்டித் துறைமுகப் பியரில் கரை கட்டத் தொடங்கின.

மயிலிட்டியைச் சேர்ந்த மீனவர்களே அந்த இடத்திலிருந்து இனிமேல் தமது தொழிலில் ஈடுபடுவார்கள் என்று கூறப்பட்டது. (உ)

## மொறட்டுவைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாடுகளை அந்தப் பல்கலைக் கழகம் இரண்டு வாரங்களுக்கு நிறுத்தியிருக்கும் சூழ்நிலையிலேயே இந்தத் தகவல் வெளியாகியிருக்கின்றது.

பல்கலைக்கழகத்தின் எண்பத்தைந்துக்கும் அதிகமான மாணவர்கள் டெங்கால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்றும், ஒரு மாணவி உயிரிழந்துள்ளார் என்றும் ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே. (உ)

## 'சைட்டம்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான சந்திப்பின்போது சில முடிவுகள் எட்டப்பட்டன எனத் தெரிவித்து, ஜனாதிபதியின் செயலாளரின் பெயரில் ஊடக அறிக்கை ஒன்று வெளியானதும் –

அத்தகைய ஊடக அறிக்கை வெளியானமை தனக்குத் தெரியவே தெரியாது என அப்போது ஜனாதிபதியின் செயலாளராகவிருந்த பி.பி.அபயக்கோன் தம்மிடம் கூறினார் என சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன கூறியிருந்தார் என்றும் – குறிப்பிடத்தக்கவை.

அதற்குப் பின்னர் ஏற்பட்ட குழப்பங்களை அடுத்தே ஜனாதிபதியின் செயலாளர் தமது இராஜினாமாவைச் சமர்ப்பித்தார் என்றும் கூறப்பட்டது.

ஜனாதிபதியின் புதிய செயலாளராக ஒஸ்டின் பெர்னாண்டோ இன்று பதவியேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## டெங்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விஜேவர்தன என்ற மாணவன் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

பதுளை சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் தரம் 10 இல் கல்வி கற்கும் சசிகுமார் கவீஸ் என்ற மாணவன் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, பதுளை பெரிய வைத்தியசாலையில் 61 பேர்டெங்கு நோய்த்தொற்றுக்கு உள்ளான நிலையில், சிகிச்சை பெற்று வருகின்றனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)

## மயிலிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
2009 இல் யுத்தம் முடிவுக்கு வந்ததாயினும், 2015 இல் தற்போதைய அரசு பதவிக்கு வரும்வரையில் நிலவிடுவிப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் நிகழவில்லை.

நல்லாட்சி அரசின் கீழ் நிலவிடுவிப்புஓரளவுஇடம்பெற்று வருகிறது.

அதன் ஒரு கட்டமாக நேற்றுக் காலை 9.30 மணிக்கு மயிலிட்டி துறைமுகம் உள்ளடங்கலாக ஜே.251 கிராம சேவையாளர் பிரிவில் சுமார் 54 ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டது.

விடுவிப்பு நிகழ்வு மயிலிட்டி கண்ணகை அம்மன் வளாகத்தில் நடைபெற்றது.

அந்நிகழ்வில் யாழ். மாவட்டப் படையின் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி காணிகளை யாழ். அரசாங்க அதிபர் என்.வேதநாயகனிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் படை அதிகாரிகள் கலந்து கொண்டனர். (உ)

# உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் மாணவர்கள் கல்விச் சுற்றுலா

## படையினரே அழைத்துச் சென்றனர்



யாழ்ப்பாணம், ஜூலை 04

படையினர் ஆக்கிரமித்து வைத்திருக்கின்ற காங்கேசன் துறை அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் கோப்பாய் நாவலர் தமிழ்வித்தியாலயத்தின்ஆரம்ப பாடசாலை மாணவர்கள் சுற்றுலாவாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

படையினரின் ஏற்பாட்டில் கடந்த வாரம் இந்தச் சுற்றுலா இடம்பெற்றது எனக் கூறப்படுகின்றது. இந்தச் சுற்றுலா பயணத்தில் 8 ஆசிரியர்களும் 69 மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இவர்கள் பலாலி விமானப் படைத் தளம், காங்கேசன் துறையில்உள்ள பெரிய இலங்கைக்கடற்படைத் தளம்,தல்செவன ஹோட்டல் மற்றும் சில இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (ம)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைப்பின் ஏற்பாட்டில் நியுயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் தலைமையகத்திற்கு முன்னால் ஆர்ப் பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களின் பிரதிநிதிகள் ஐக்கிய நாடுகளின் பொது செயலாளரை சந்தித்து மனுவைக் கையளித்தனர். (ம)

## வியாழன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்தவிடயம்தெரிவிக்கப்பட்டது.

இந்த வேலை நிறுத்தத்தினால் நாடு முழுவதும் சுகாதார சேவை பெரிதும் பாதிக்கப்படலாம் என அஞ்சப்படுகின்றது.

இந்த வேலை நிறுத்தம் தொடர்பான மேலதிக தகவல்களை மருத்துவர் சங்கம் இன்று வெளியிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
படக்கூடாது என்று அத்தீர்மானம் தெரிவித்துள்ளது.

இதேசமயம், புதிய அரசமைப்பு ஒன்றை அரசு சமர்ப்பித்தால் ஒட்டுமொத்த சங்க சமூகமும் அதனை எதிர்க்கும். அத்தகைய முயற்சிக்கு ஆதரவு அளிக்க முடியாது என அஸ்கிரிய பீடத்தின் பிரதிநிதிகள் நேற்று பௌத்த சாசன அமைச்சின் பிரதிநிதிகளிடம் தெரிவித்தனர் என்றும் கூறப்பட்டது. (உ)

## சைட்டத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
றது. நல்லாட்சி அரசில் அங்கம் வகிக்கும் இக்கட்சியின் சார்பில் அத் பொதுச் செயலாளரும், அமைச்சருமான பட்டாரி சம்பிக்க ரணவக்க இந்தக் கோரிக்கையை நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பகிரங்கமாக அறிவித்தார்.

இத்தகைய உத்தரவை நீதிமன்றம் விடுக்கும் வரை காத்திருப்பது மோசமான நிலைமையை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

மேற்படி 'சைட்டம்' குழப்பத்துக்கு பிரதான கர்த்தா முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே என்றும் அவர் சொன்னார்.

'சைட்டம்' விவகாரம் நல்லாட்சி அரசுத் தரப்புக்குள்ளும் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டது என்பதையே அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் அறிவிப்பு எடுத்துக் காட்டுவதாக நோக்கர்கள் தெரிவித்தனர்.

## நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை **யாழ் பிரதேசத்தில்** கம்பர் மலை, நாவற்குழி, மறவன் புலோ, தச்சன்தோப்பு, தனங்களப்பு, கோகிலாக்கண்டி, கேரதீவு வீதி, அறுகுவெளி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** தேக்கவத்தைப் பிரதேசத்திலும் **மன்னார் பிரதேசத்தில்** பெரியநீலாச்சேனை, இத்திக்கண்டல், சொர்ணபுரி, பாப்பாமோட்டை, அடம்பன், பரப்பாங்கண்டல், அடம்பன் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (இ)

## மிருகக் காட்சி சாலை பார்வையிடும் நேரம் நீடிப்பு

தெஹிவளை மிருகக் காட்சி சாலை மக்கள் பார்வைக்காகத் திறக்கப்படும் நேரம் நீடிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

அதன்படி, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதியிலிருந்து காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை மிருகக்காட்சிசாலை மக்கள் பார்வைக்காகத் திறந்திருக்கும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## மானிப்பாய் இந்துவின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினமும், பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்குக் கல்லூரி முதல்வர் எம்.இந்திரபாலா தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராகக் கல்லூரியின் பழைய மாணவனும், ஆஸ்திரேலியாவில் வசிக்கின்றவருமான ஓய்வு நிலை சிரேஷ்ட பொறியியல் முகாமையாளர் கே.சாந்தனும், சிறப்பு விருந்தினராகக் கல்லூரியின் பழைய மாணவனும், கனடா Ryerson பல்கலைக்கழக விரிவுரையாளருமான ரி.உதயகரனும், கௌரவ விருந்தினராகச் சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந்தராஜாவும் கலந்து கொள்வர்.

நிறுவுநர் நினைவுப் பேருரையை ஓய்வுநிலை யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.வசந்தசேனன் ஆற்றவுள்ளார். இந்த நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ச)

# ஆபத்தான சட்டமூலம் ஒன்றை நிறைவேற்றப் போகிறது அரசு!

## கடுமையாகச் சாடுகிறார் பீரிஸ்



கண்டி, ஜூலை 04

நாட்டுக்குக் கெடுதியான, மிகவும் ஆபத்தான சட்ட மூலம் ஒன்றை அரசு நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற உள்ளதாக முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கண்டி - கெட்டம்பே ராஜோவனாராமய விகாரையின் விகாராதிபதி சிறி விமலதேரரை நேற்றுமுன்தினம் சந்திக்கச் சென்ற போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அந்தச் சட்டமூலத்தின் ஊடாக நாட்டின் இராணுவ வீரர் அல்லது அரசியல்வாதிக்கு எதிராக வெளிநாட்டு அரசோ அல்லது வெளிநாட்டின் நிறுவனம் ஒன்றோ குற்றச்சாட்டுக்களை முன்வைக்குமாயின், விசாரணைகளுக்காக சம்பந்தப்பட்டவர்களை அந்த நாட்டிடம் ஒப்படைக்க வேண்டும்.

அதன் பின்னர் சம்பந்தப்பட்டவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நேர்நிலைப்படுத்த முடியும். இது தொடர்பாக மாகாநாயக்க தேரர்கள் உட்பட மகாசங்க சபையினருக்கு விளக்கி இந்த நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டும்.

இதனால், ஏற்படப் போகும் பிரதிபலன்கள் தொடர்பில் மக்களுக்கு தெளிவான விளக்கம் இல்லை.-என்றார். (எ)

## அரச ஊழியருக்கான புதிய கட்டுப்பாடு நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது

கொழும்பு, ஜூலை 04

அரசஊழியர்களின்வருகை மற்றும்வெளியேறும்நேரத்தை உறுதி செய்வதற்கான நடவடிக்கை நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

அதற்கமைய கைரேகை இயந்திரம் பயன்படுத்தும் நடவடிக்கை கடந்த முதலாம் திகதி முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கை ஊடாக அனைத்து அமைச்சின் செயலாளர்கள், மாகாண செயலாளர்கள், திணைக்கள பிரதானிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

இந்த ஆலோசனைக்கு அமைய புதிய நடவடிக்கை நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. பொது நிர்வாகம் மற்றும் நிர்வாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறியின் கையொப்பத்திலான சுற்றறிக்கை இலக்கம் 03/2017 மற்றும் 2017.04.19 திகதியிலான கடிதத்தில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (எ)

# ஊழலுக்கு எதிரான குழுவின் கால எல்லை நீடிக்கப்படுமா?

கொழும்பு, ஜூலை 04

ஊழலுக்குஎதிரானகுழுவின் அலுவலகத்தைத் தொடர்ந்தும் நடத்திச்செல்வதா இல்லையா என்பது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளதாக, அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால், அந்த அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் தெரியப்படுத்த, கடந்த வருடம் ஜனவரி மாதம் அந்த அலுவலகம் நிறுவப்பட்டது.

அதன் பதவிக் காலம் இந்த வருட ஜனவரி மாதத்துடன் நிறைவடைந்த நிலையில், பின்னர் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது.

இதற்கமைய, கடந்த 30 ஆம் திகதியுடன் அந்தக் கால எல்லையும் நிறைவடைந்த நிலையில், அதன் கால எல்லையை நீடிக்க இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அந்த அலுவலகம் அமைக்கப்பட்டதன்பின்னர், பொலிஸ் நிதி குற்ற விசாரணைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

ஊழல் செயற்பாடுகள் தொடர்பான விசாரணைகளை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், ஊழல் மோசடிக்கான அலுவலகம் தற்போது, தமக்கு வரும் முறைப்பாடுகளை பொலிஸ் நிதி குற்ற விசாரணைப் பிரிவுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளை மட்டுமே மேற்கொண்டு வருவதாக, தெரியவந்துள்ளது.

இந்தநிலையில், ஊழலுக்கு எதிரான குழுவின் அலுவலகத்தின் கால எல்லையைத் தொடர்ந்தும் நீடிக்க வேண்டிய தேவையில்லை என்பது அரசின் கருத்து என்று கூறப்படுகின்றது.



புளொட்டின் 28ஆவது வீரமக்கள் தினத்தை முன்னிட்டு வட்டுக்கோட்டைத் தொகுதி கட்சி அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்களால் தொகுதி நலனைப் பேணுதல் எனும் தொனிப்பொருளில் நேற்று முன்தினம் சுழிபுரம் கிராமத்தில் குப்பைகளையும், கழிவுகளையும் அகற்றும் சுத்திகரிப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

## சாயி நிலையத்தில் "குரு பூர்ணிமாதினம்"

கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள சாயி நிலையத்தில், சத்யசாயிபாபா மத்திய நிலையமும், சீரடிசாயி மத்தியநிலையமும் இணைந்து ''குரு பூர்ணிமாவழிபாடு'' நிகழ்வை, எதிர்வரும் 8 ஆம் திகதி, சனிக்கிழமை, பௌர்ணமி தினத்தன்று, காலை 8 மணிக்கு ஒழுங்கு செய்துள்ளனர்.

இலங்கையில் சாயி நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கும், மதுரை பாதுகா டிரஸ்ட் மூலம் கிடைக்கப்பட்ட, பகவான் சத்ய சாயிபாபாவின் பொற்பாதங்களில் அணிவித்த பாதரட்சைக்கும், அகில இந்திய சீரடிசாயி சமாஜமான, சென்னை சீரடிசாயி ஆலயத்திலிருந்து பிரதிட்சை செய்யப்பட்ட சீரடி சாயிநாதரின் வெள்ளித் திருப்பாதத்துக்கும், சாயி பக்தர்களினால் அபிஷேக பூஜை இடம் பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும். இலங்கையில் கொழும்பிலுள்ள சாயி நிலையத்தில் இவ்விரு சாயி பொக்கிஷங்களும் சக்தி வாய்ந்தவையாக உள்ளன. குரு பூர்ணிமாதினத்தில் இவற்றை வழிபாடு செய்வது மிகவும் முக்கியமானதாகும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (இ)

## இஸ்ரேல் செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

இலங்கையர்கள் 265 பேர் இவ்வாண்டில் கடந்த மாதம் வரையான காலப் பகுதியில் இஸ்ரேல் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அந்தவகையில், குறித்த இலங்கையர்கள் அனைவரும் விவசாயத் தொழிலின் நிமித்தமே இஸ்ரேலுக்குச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இதேவேளை, கடந்த ஆண்டில் விவசாய தொழிலின் நிமித்தம் 359 பேர் வரையில் இஸ்ரேல் சென்றுள்ளனர்.

மேலும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் திணைக்களத்தின் ஊடாக இஸ்ரேலுக்குத் தொழில்வாய்ப்புக்காக ஆட்சேர்ப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# யாழ். அரியாலை வெட்டுக்குளம் அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான இரதோற்சவ சிறப்பு மலர் - 04.07.2017

## ஆலய வரலாறு

சைவமும் தமிழும் தளைத்தோங்கும் யாழ்ப்பாண நகரின் கிழக்குத் திசையின் அரியாலைக் கிராமத்தின் மேற்குத் திசை யில் வீற்றிருந்து அருள் சுரக்கும் அரியாலை மேற்கு வெட்டுக் குளம் புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் மிகத் தொன்மையான வரலாற்றைக் கொண்டது. யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னர்களின் இராசதானியாக விளங்கிய ‘நல்லூரின்’ தென் புலத்தில் அன்று தொட்டு இன்றுவரை அருள்மழை பொழிந்து எம்மைக் காப்பாற்றி வருகிறாள்.

இந்த ஆலயத்தின் வரலாறு பல நூற்றாண்டுக்கு முற்பட்டவையாகும். ஆலயத்தின் மேற்குப் புறத்தே குடிமனையும், வடக்கு, கிழக்கு, தெற்குப் பகுதிகளை வயல் நிலங்களுமாகக் காட்சி தரும். இந்த வயல்களின் உரிமையாளர்களாகிய ‘‘கமக்காரர்’’ தமது காவல் தெய்வமாக இந்த ஆலயத்தை ஆரம்பம் முதல் சேவித்து வந்ததாக வரலாறு கூறுகிறது.

முன்னொரு காலத்திலே இந்த பகுதியானது குளப்பகுதி யாகவும் வயல்பகுதிகளாகவும் இருந்தது. அப்போது ஆடுகளை மேய்ப்பதற்கு சிறுவன் ஒருவன் வந்திருந்த சமயம் நண்பகல் வேளை அந்த மரத்தின் கீழ் இருந்த வயதுபோன ஆச்சி ஆடு மேய்ப்பனை அழைத்து எனக்கு தலை கடிக்கிறது தலையில் என்ன இருக்கிறது என பார் என்று கூப்பிட அந்த சிறுவன் ஆச்சியின் தலையை விரித்தபோது ஆயிரம் கண்கள் தலையில் தெரியவே அவன் அலறியடித்துக் கொண்டு ஓடிச்சென்று ஊரவர்களிடம் தெரிவிக்க ஊரவர்களும் வந்து பார்த்தவேளை அந்த ஆச்சியை காணவில்லை. எனவே இந்த நேரத்தில் வந்தது எமது காவல் தெய்வம் அம்மாள் ஆச்சி தான் என நினைத்து அன்று முதல் இந்த அரச மரத்தின் கீழ் வைத்து வழிபடத்தொடங்கினர்.

காலமாற்றத்தால் இந்த ஆலயத்தின் பரிபாலனத்தை மேற்குத் திசையில் வாழ்ந்த மக்களிடம் ஒப்படைக்கத் தீர்மானித்தனர் கமக்காரர். இதற்கமைய அன்றைய ஊர்ப்பிரமுகர்களிடம் ஒப்படைத்தனர். ஆலய நிர்வாகத்தைப் பொறுப்பேற்ற சகோதரர்கள் அரியாலைமேற்குப் பகுதி மக்களுக்கு உரிமையாக்கினர். ஊர் மக்கள் ஒன்பது மணியகாரரைத் தெரிவுசெய்து ஆலயத்தை வழி நடத்திச் சென்றனர். இருப்பினும் ஆலய நிர்வாகத்தில் பழைய கமக்காரரின் தலையீடுகள் இருந்து வந்தன. காலப் போக்கில் சபை மீள புனரமைப்புச் செய்யப்பட்டு இருபது மணியகாரர்களைக் கொண்ட மணியகாரர் சபையாக மாற்றமடைந்து நீண்ட காலமாக நிர்வாகம் நடைபெற்றது.

காலத்தின் மாற்றத்தினால் ஊர் மக்கள் அனைவரையும் நிர்வாகத்தில் இணைப்பதற்கான நல்நோக்குடன் மணிய கார சபை பொதுச் சபையாக மாற்றமடைந்து ஆலயம் பல புன ருத்தாரணப் பணிகளினால் இன்று பிரபல ஆலயமாக விளங்கு கின்றது. மற்றைய ஆலயங்களில் உள்ளது போன்று பல வகை யாக கர்ண பரம்பரைக் கதைகள் இங்கும் நிலவி வந்தாலும் அவை ஏட்டில் எழுதப்படாத வாய் மொழிச் சம்பவங்களாகவே கருதப்படுகின்றன.

### அம்பாளின் அதிசயம்

யாழ்ப்பாணக் குடா நாடே அதிசயிக்கும் ஆச்சரிய மான சம்பவம் 1912 ஆம் ஆண்டு நடைபெற்றதை யாழ்.கச்சேரி ஆவணங்கள் சாட்சி பகர்கின்றன. அன்று அந்நியர் ஆட்சிக் காலத்தில், யாழ்.குடாநாடு என்றுமே காணாத சோகச் சம்பவம் இடம்பெற்றது.

குடா நாட்டு மக்களை வைசூரி என்னும் அம்மைநோய் தாக்கத் தொடங்கியது. அரசினால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அம்மை நோய் கோரத் தாண்டவமாடியது. கிராமம் கிராமமாக மக்கள் நோயினால் மடிந்தனர். பல ஆயிரக்கணக்கானவர் ஒரு வாரத்தில் மடிந்ததாக ஆவணவங்கள் கூறுகின்றன. நோய்த்தொற்று ஏற்பட்டவர்களை ‘‘ஊர்காவற்றுறைக் கடற்கோட்டையில்’’ தனிமைப்படுத்தி மேலும் நோய்ப் பரவாமல், ஆட்சியாளர் செய்தனர். அநேகர் இந்நோயினால் மாண்டவர்கள் தவிர நோயில் இருந்து குணமாகியோர் உடற் சிதைவுகளுடன் காலத்தை ஓட்டினர்.

ஆனால் அரியாலை மேற்குக் கிராமத்தில் மட்டும் ஒருவருக்குக் கூட இந்நோய் ஏற்படவில்லை. இப் பேரழிவில் இருந்து எம் மக்களைக் காத்தவர் எமது அன்னை புவனேஸ்வரித் தாயாகும்.

### சிறப்பு

இவ்வாலயத்தின் சிறப்பாகக் கருதப்படுவன:

* ஆலயத்தின் பின்புறத்தே அமைந்துள்ள அரச மரம் (இது தொன்மையான வரலாற்றில் கூறப்படுள்ளது)
* கம்பீரமான ‘‘பெரிய குதிரை வாகனம்’’ இந்த வாகனம் இந்தியாவில் நிர்மாணிக்கப்பட்டு, யாழ்ப்பாணம் அராலிப் பகுதி ஆலயத்திற்கு 1923 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது.

ஒரு நாள் ஊரின் பிரமுகர்களில் ஒருவருக்கு கனவில் தோன்றிய அம்பாள் ‘‘அராலிச் சந்திக்கு உடனே போ, அங்கே எனது குதிரை வாகனம் வந்துள்ளது. உடனே எடுத்து வா’’ என்று கூறினார்.

ஊர் மக்களிடம் தான் கண்ட கனவை எடுத்துக் கூறிய பெரிய வர் துணையாக வேறு சிலருடன் அடுத்த நாள் காலை அராலிச் சந்திக்குச் சென்றார். அங்கே நின்ற அக்கோயில் நிர்வாகிகள் இவர்களை அன்புடன் வரவேற்று உரிய பணத்தைப் பெற்று வாக னத்தை கை மாறினார். கம்பீரம் குறையாத அக்குதிரை வாகனம் ஆலயத்தின் முக்கிய திருவிழாக்களில் பயன்டுவது அற்புதமே.

பொதுச் சபையின் நிர்வாகத்தில் புதுப் பொலிவுடன் சிறப் புற்று விளங்கும் இவ் வாலயத்தின் வருடாந்த உற்சவம் கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி சப்பைரதம், வேட்டைத் திருவிழா, தேர், தீர்த்தம் என்பன வுடன் முடிவுறும்.

இவ்வாலயத்தில் தற்போது மூர்த்தி, தலம், விருட்சம் ஆகிய மூன்றும் அமையப்பெற்று குடா நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து இத் திருவிழாக்காண இவ்வூர் மக்களின் உறவுகள் இங்கு வந்து அம்பாளின் அருளைப் பெற்று நலமுடன் வாழ்வார்களாக.

### பிரதம குருவின் ஆசியுரை



உலகத்தின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணமாய் விளங்கு வது சக்தி. எறும்பு முதல் யானை ஈறான உயிரினங்களின் இயக்கத்துக்கு கார ணம்சக்தி. பூமிமுதலானகிரகங்களயின் இயக்கத்துக்கு ஈர்ப்பு சக்தி அவசியம் இப்படி எவ்வாறு நோக்கிலும் சகலவற் றுக்கும் சக்தி காரணமாகிறாள்.

அந்த வகையில் அன்பர்களாகிய அடியவர்களின் துயர்துடைத்து பேரின்பத்தை அளித்து வரும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளுக்கு மஹோற்சவ திருவிழா நடைபெற்று இன்று இரதோற்சவம் நடைபெறும். இத்திரு நாளில் அம்பாளை தரிசிக்க வரும் அனைத்து பக்த கோடிகளுக்கும் அம்பாளின் அருட் கடாட்சம் கிடைக்க வேண்டும் என அருளாசி கூறுகிறேன்.

**தேவஸ்தான மஹோற்சவக் குரு**
**சிவஸ்ரீ சி.ஜோதிந்திரக்குருக்கள்**

### இஷ்ட சித்திகளை பெறுவீர்களாக



ஈழமணித் திருநாட்டின் ஈடில்லாச் சிரமேயென விளங்கிடும் யாழ்ப்பாணத் திலே சைவமும் தமிழும் வளர்த்த நாவ லர் பெருமான் தோன்றிய நல்லூரை அடுத்தாற் போல் உள்ள அரியாலை யூரில் வெட்டுக் குளத்தில் வீற்றிருந்து அருள்சக்தியாக விளங்கும் ஸ்ரீ புவனேஸ் வரி அம்பாளுக்கு இன்று இரதோற்சவ திருவிழா. இத்திரு நாளில் அனைத்துப் பக்த கோடிகளும் கலந்துகொண்டு அம்பாளைத் தரிசித்து அவளிடம் இருந்து இஷ்ட சித்திகளைப் பெற்றிட ஆசி கூறுகிறேன்.

**ஆலய அட்சகர்**
**பிரம்மஸ்ரீ சண்முக மாதுளசர்மா**

### அம்பாளின் அருள் அனைவருக்கும் கிடைக்குக!’



சைவமும் தமிழும் தளைத்தோங்க அரியாலையூரில் வெட்டுக் குளத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ புவனேஸ்வரி அம் பாளுக்கு இரதோற்சவ திருநாளாகிய இன்று அடியவர்க்குகெல்லாம் அருள் பாலித்துக் கொண்டிருக்கிறாள். இத் திருநாளில் இம் மஹோற்சவத்திற்கு ஆலய நிர்வாக சபைத் தலைவராக இருந்து வாழ்த்துக் கூறுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆலய மஹோற்சவ காலத்தில் சரீர உதவிகள் செய்தவர்கள் திருப்பணிகள் செய்வதற்கு உதவியவர் கள், நிதியுதவி வழங்கியவர்கள், இரவு பகல் பாராது ஆலயத்தில் நின்று பணி செய்தவர்கள், கோயில் உபயகாரர்கள் மற்றும் அன்னதானம் வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் பக்கத கோடிகளுக்கும் எம்பெருமாட்டியின் அருளாசி கிடைக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**தலைவர்**
**ச.நாகராசா.**

## தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்...

காலை 9.00 மணிக்கு வசந்த மண்டப பூசை, 10.30 மணிக்கு தேர்த்திருவிழா, நண்பகல் 12.30க்கு பச்சை சாத்துதல், 1.00 மணிக்கு நவசக்தி அர்ச்சனை.

உங்கள் எதிர்காலத் திட்டம் எதுவாயினும் உங்கள் ஒளிமயமான வாழ்வுக்குக் கைகொடுக்க நாம் தயார்....
★கல்வி ★வேலைவாய்ப்பு ★வெளிநாடு
எதுவாக இருந்தாலும் எம் இளஞ் சந்ததியின் கலங்கரை விளக்காக விளங்கும் WINSTAR CONSULTANTS உடன் தொடர்பு கொள்ளுங்கள்.
- சிறந்த உயர்தர கல்வி வழிகாட்டலை பெற,
- தகுதிக்கேற்ப விரும்பிய வேலைவாய்ப்பு பெற,
- கனவு நாட்டினை நேர்மையான முறையில் சென்றடைய
Plan your bright future with us.
WINSTAR CONSULTANTS
106, தபாற் பெட்டி சந்தி, பலாலி வீதி,திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே.021 320 2789
www.winstarjaffna.com

வட இந்திய, தென் இந்திய, சீரடி காசி யாத்திரை
யாத்திரை செல்ல விரும்புவோர் குறைந்த செலவில் பயணமாகலாம்.
தொடர்பு
கலாநிதி வீ.ஸ்ரீ.ரங்கநாதன்
மகன் ராஜன்
0777680102

நல்லூர்க் கந்தன் திருமண சேவை
எல்லா மதம், எல்லா இனம், வெளி நாடு, உள்நாடு, ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.
ஸ்ரீ.ஜெயந்தி
தொ.இல – 0779733183
0212227002/ 0212221468
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சிற்றி லைன்
யாழ். - கொழும்பு தினசரி பஸ்சேவை
A/C, No A/C with Video coach
ஆசனப் பதிவுகளுக்கும் தொடர்புகளுக்கும்
T.P - 0770646293
0770868280

சகல விதமான கொண்டாட்டங்களுக் கும் நாடவேண்டி ஒரே ஸ்தாபனம்
விஜயா வீடியோ & மணப்பந்தல் சேவை
3/8, சென்.பெனடிக்ற் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பேசி – 0779855900 0776158879
உரிமையாளர் –
மனுவேல் அருணா யோகநேசன்

ரம்மிஸ் ஸ்பொட்
மணப்பந்தல் சேவை
ஒளி, ஒலி அமைப்பாளர்
டிஜிற்றல் வீடியோ & போட்டோ
தொ.இல – 0777111706 021 3737147
21, வைரவர் கோவில் வீதி, அரியாலை யாழ்ப்பாணம்.
உரிமையாளர் - க.நந்தபாலா

யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகிறது
ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி ஜோதிட நிலையம் (PVT) Ltd.
P.ஜெய்சங்கர்
கடந்த கால, நிகழ்கால, எதிர்காலம் போன்றவற்றைக் கூறுகிறது.
தொடர்பு : 021 221 7944
நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர்.

தீபா பியூட்டி
Bridal Dressing, & Hair Dressing
Facial, Hair cutting, Hair Dressing, Bridal Dressing & Bridal Make up
அனைத்துவிதமான கேக் வகைகளும் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.
Mrs.D.Partheeba
(Ad. Diplomo in Beauty therphy)
ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கு
0766505451, 0755595153

நியூ லக்கி ஸ்ரோர்ஸ்
அன்றாடப் பாவனைப் பொருள்கள், குளிர்பான, ஐஸ்கிறீம் வகைகள், தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகள், பாடசாலை உபகரணங்கள் யாவும் பெற்றுக் கொள்ளலாம்.
இல – 59, ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

நியூ லக்கி ஹாட்வெயார்ஸ்
இல - 848, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0213734432
உரிமையாளர் – ரூபன்

ஸ்ரீ மாருதி அச்சகம்
சகலவிதமான அச்சக வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.
555, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே – 021 4545 044

ஆலயத்தின் பிரதான கோபுர திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அன்பளிப்புகளை வழங்க விரும்பும் பக்தர்கள் அம்பாளுக்கு வழங்கலாம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.07.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.